திராவிட நாடு

23—8—59 | வார வெளியீடு | விலை 16 காசு

வெட்கமில்லை?

—(ஆ. ஆரிது)—

நாய்கூட வஞ்சிக்கா நல்லோர்க் குத்தான்
நன்றிசொலும், வாலாட்டும், குழையும்; நேற்றைச்
சேய்கூட ஈன்றெடுத்த தாயைத் தானே
சேர்ந்தணைந்து பேரின்பம் கொள்ளும்; வறியோர்
வாய்கூட மாசில்லாப் பெரியோ ரைத்தான்
வாழ்த்திநிதம் பாடியவர் புகழைப் பெய்யும்
தேய்சுடரின் பிறையொளியும் இல்லா அந்தச்
சிறுவடவர் முன்தாழும் தமிழா! கேளே!

சப்பாத்தி யன்றியேதும் அறியா அன்னோர்
தரணிக்கே உணவிட்ட உந்தன் மண்ணைத்
தப்பாகக் கணக்கிட்டே அடக்கி ஆண்டு,
தம்பட்டம் அடிக்கின்றார்; காண்கின்றாய்நீ!
முப்போகம் விளைகின்ற நெல்லை அள்ளும்
மூத்ததொரு குடிப்பிறந்த தமிழா! நீயோ
'அப்பா'வென் றன்னவரின் அடிமை யாக
அடிதொழுது வாழ்கின்றாய்; வெட்க மில்லை?

அகந்தந்தும் புறந்தந்தும் ஆக்கந் தந்தும்
அறக்குறளின் ஒளிதந்தும் அறிவைத் தந்தும்,
பகர்மொழிகள் யாவற்றின் ஒளிர்ந்த முன்னைப்
பசுந்தமிழைத் தாயாகக் கண்டாய், கொண்டாய்;
பகலொளிரும் விண்மீனாய்க் காட்சி தரும்
பதர்மொழியாம் இந்திதனைத் தலைமேல் தாங்கி
நிகரில்லை இதற்கிங்கே என்றே ஆடும்
நெஞ்சில்லா வஞ்சகனே வெட்க மில்லை?

தமிழ்க் கழுத்தறுப்போர் சங்கம்!

(கா. வேழவேந்தன்)

அன்புள்ள நண்பா!

தமிழகத்தின் தலைநகரில் நம் அருமை மொழி செழித்துக் கொழித்து வளர்வதாக நீ கனவு கண்டுகொண்டிருக்கிறாய்! அப்படியெல்லாம் வீணாக மனப்பால் குடிக்கவேண்டாம் என்பதைச் சுட்டிக் காட்டவே இந்தக் கடிதம் எழுதுகிறேன். சரியாகவோ, தவருகவோ இன்று பத்திரிகை உலகத்தை முழுக்க முழுக்கக் கைப்பற்றிக் கொண்டிருக்கும் ஒரு கூட்டம், இங்கே ஆகஸ்டு 1, 2-தேதிகளில் "இராஜாஜி மண்டப"த்தில் மாநாடு கூட்டித் தமிழ்மொழியின் மீதே நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றது. இதைக் கேட்டால் உறுதியாக நீ வெட்கப்படுவாய்!

தமிழ் எழுத்துக்களைச் சேர்த்து சிறுகதைகளையும் புதினங்களையும் ஆக்கி, அதனுல் வயிறு கழுவிக்கொள்ளும் இவர்கள், தமிழில் உணர்ச்சிகளையும், எண்ண நெகிழ்ச்சிகளையும் வெளிப்படுத்தும் சொற்கள் இல்லையே என்ற முடிவை வாய்விட்டுக்கூறி வருத்தம் தெரிவித்துக்கொண்டார்கள்.

இதைக்காட்டிலும் வேறொரு அதிர்ச்சிதரும் செய்தியையும் கேள்! வையகமே மதிக்கும் அளவுக்குத் தற்காலத் தமிழ் உரைநடை இந்தக் கூட்டத்தால்தான் வளர்க்கப்பட்டதாம்; வளர்க்கப்படுகிறதாம்; வளர்க்கப்படுமாம்!

இம்மாநாட்டில் 'தமிழில் உரைநடை' என்றொரு கருத்தரங்கம் நிகழ்ந்தது; அருமை நண்பனே! இந்தத் தலைப்பைக்கூட, பேசியபலர் 'தமிழில் வசனம்' என்று மாற்றிக்கொண்டுதான் பேசினுர்கள்!

அப்படி என்ன பேசினுர்கள் தெரியுமா?

"இன்று தூயதமிழ், தூயதமிழ் என்றெல்லாம் வரட்டுக் கூச்சல் இடுகின்றவர்கள், துணிந்து தமிழுக்குத் துரோகம் செய்கிருர்கள்; தமிழுக்குத் தொண்டுசெய்வதாகக் கூறிக்கொண்டு, நாளுக்கு நாள் தமிழைப் புதைகுழிக்கு அனுப்புகிருர்கள்; தமிழில் கலப்புத்தேவை என்று மட்டும் சொல்லமாட்டோம்; பிறமொழிக்கலப்பு மிகமிக இன்றியமையாதது என்றுதான் சொல்வோம்.

இதுவரை தமிழில் பிறசொற்களைக் கலவாமல் எழுதியவன்யார்? எங்களுக்குச் சான்று கூற ஒரு படையே திரண்டுவருமே! தொல்காப்பியர் முதல் குமரகுருபரர்வரை எங்கள் வாக்குக்கு 'ஆம், ஆம்' என்று கூறி அணிவகுத்து நிற்கின்றுர்களே! அப்படியிருக்க, 'தூய தமிழ்' என்பதில் என்ன 'அர்த்தம்' இருக்கிறது?

தூய தமிழிலேயே எழுத வேண்டும் என்பவர்கள் எத்தனை சொற்களை வைத்திருக்கிருர்கள்? தூய தமிழில் எழுதலாம் என்கிருர்கள்; ஆனுல் கலப்புச்சொல் நிறைந்த திருப்புகழில் இருக்கும் சந்தம் அந்நூலுக்கு வருமா? எனவே பத்தாம் பசலிகளே! உங்கள் பாதையை மாற்றுங்கள்; பிறசொற்கள் வந்து கலக்கத் தடைபோடாதீர்கள்" என்று ஒரு முழக்கமே எழுந்தது.

இந்த வீர உரை யாரோ ஒரு வேதாந்தாசாரிடமிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று உன் நெஞ்சம் கற்பனை செய்யும்! நண்பா! வேறு யாருமல்ல. சிலம்புச் செல்வர் என்று தன்னை எல்லாரும் அழைக்கவேண்டுமென்று விரும்புகிருரே, அவர்தான் இப்படிக் கூறியவர்! அந்தக் 'குழப்பச் செல்வர்' அன்று, தமிழில் பிறமொழிச் சொற்கள் வந்து கலக்கவேண்டுமென்பதற்குக் காட்டிய சான்றுகளை நீ வந்து கேட்கவில்லையே! கேட்டிருந்தால் இவர்தானுதமிழரசு காணப் புறப்பட்டிருக்கும் மன்னுதி மன்னர் என்று உன் நெஞ்சம் வேதனையால் வெந்து சாம்பலாகியிருக்கும்!

மேலும் அவர் என்னசொன்னுர் தெரியுமா?

"'தருமம்' என்பது வடசொல் தான்! ஆனுல் அச்சொல்லில் உள்ள 'த்' கரத்தை, 'த' (Dha) கரமாக ஒலித்தால்தானே கடினமாக இருக்கிறது? அதே 'த்' கரத்தை 'த' (Ta) கரமாக ஒலி[த்]தால் தமிழ்ச் சொல்லாகிவிடுகி[ற]தல்லவா?" என்று பிய்த்து விள[ாசி]னுர்! ஐயயோ! அவர் வாயு[ரை]கேட்டு அந்தக் 'கோஷ்டி' எப்படி[க்] கையொலி செய்தது தெரியுமா?

அதுமட்டுமல்ல! சென்னை[த்] தமிழாசிரியர் கழகத் தலைவரையே அழைத்து வந்து, தங்கள் கரு[த்]தரங்கிற்குத் தலைமை வகிக்க[ச்] சொல்லிவிட்டு, அவர் எதிரிலேயே சொல்லாத சொற்களைச் சொல்லி[க்] காட்டி, தமிழில் உரைநடை வளர[ப்] புலவர் கூட்டம் இம்மியும் பாடுபட[]வில்லை; பதிலாகத்தடைபோட்ட[து] என்றெல்லாம் கூறினுர்கள்!

இப்படிக் 'கதை பண்ணி' வயிற்றைநிரப்பும் ஒருவர் சூருவளி[]யாக முழங்கிய கருத்தையும் இதோ தருகிறேன்.

"சகோதர, சகோதரிகளே! தமி[ழ்] உரைநடையை, களவியலுரை எ[ழு]திய நக்கீரர் வளர்த்தார்; இளங்கோ வளர்த்தார்; வீரமாமுனிவர்வளர்[த்]தார்; மறைமலையடிகள் வளர்த்தார்[;] மு. வ. வளர்த்தார் என்றெல்லாம் கூறுவது சுத்த அபத்தம்! நான் மார்தட்டிச் சொல்கிறேன்; இவ[ர்]களில் யாருமே உரைநடையை வளர்க்கவில்லை; இவர்களால் வளர்க்கவும் முடியாது. மறைமலையடிகள் ஒரு பக்கம் முழுமைக்கும் ஒரு வாக்கியம் எழுதி, உரைநடை முறையையே குழப்பினுர்; டாக்[டர்] மு. வ. வளர்ப்பது ஒன்றே ஒன்[று] உண்டு; அதுதான் நூலின் பக்க[ங்]கள்!" என்று ஆவேசக்குரலில் பேசினுர் அவர்; அதைக்கேட்[டு] 'நமஸ்கார'க் கூட்டம் ஆரவார[ம்] செய்ததையும் என் பாழும் செவி[]கள் கேட்டுக்கொண்டிருந்தன.

"எங்கோ ஒரு பகுதியில் கூடி யாரோ சிலரைக் கூட்டி, ஏதே[ா] முடிவுகளை எடுத்தால் நமக்கென்ன[?] அதனுல் மறைமலையடிகளார்க்கும் திரு. வி. க.வுக்கும் உள்ள புகழ் மங்கி விடுமா?" என்று கேட்பா[ய்]

நண்பா! இப்படிப் பேசிவிட்டு சென்றவர்கள் முகவரியற்றவர்க[ள்]

(14-ம் பக்கம் பார்க்க)

புதுவை-காரை முடிவுகள்

8] ஆண்டுச்சந்தா ரூ. 8. (23—8—59) தனிப்பிரதி 16-காசு [இதழ் 6

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றது!—என்று சேதி தெரிவிக்கும் 'இந்து' இதழ், மறந்துவிடாமல் குறிப்பிட்டிருக்கிறது, 'சென்னைமா நகராட்சி மன்ற வெற்றிக்களிப்புடன்', ஈடுபட்டவர்கள் இவர்கள் என்று. "தெரிந்துகொள்ளுங்கள் நாட்டவரே! திராவிட முன்னேற்றக் கழகம், சென்னையில் மட்டுந்தான் வெற்றிபெற்றதே ஒழிய, இதோ இங்கு தோற்றுவிட்டது!" என்பதைச் சொல்லி, ஆனந்தமும், அதன் மூலம் நாம் வளராத கட்சி எனும் விளக்கத்தையும், வேகமாகச் சொல்வோர் இருக்கிறார்கள். புதுச்சேரி—காரைக்கால் பகுதிகளில், நாம் தோற்றிருக்கிறோம் என்கிற உண்மையினை மறைக்க நாம் விரும்பவில்லை! ஆனால், அங்கே நாம் நிற்பதென முடிவு செய்த நேரத்தில், எல்லா இடங்களையும் வென்று அரசாட்சியில் அமர்வோம் என்கிற எண்ணத்துடனும் நிற்கவில்லை!! கழகம் வளரவேண்டிய வட்டாரங்கள், தமிழகத்திலேயே எவ்வளவோ உள, என்கிற உண்மையினை நாம் உணராதவர்களில்லை. சென்னையில் பெற்ற வெற்றியைக் காட்டி, 'போதும் இது. வேலை முடிந்தது' எனவும், இருந்துவிடவில்லை. பொதுத்தேர்தலின்போது, பல இடங்களில் நின்றோம்! பெற்ற வெற்றிகள் 15 தான் என்றாலும், அதன்மூலம் கழகம் பரவக் கிடைத்த வாய்ப்புகள் ஏராளமாகும்!! சனநாயகப் பாதையின் மூலமே நமது இலட்சியத்தை எய்தவேண்டுமென்று முடிவுசெய்துள்ளவர்கள் நாம். எனவே, அரசியல் கட்சி செய்யவேண்டிய கடமைகளுள் ஒன்று என்பதாலேயே, இதுபோன்ற தேர்தல்களில், வெற்றிக்கு வாய்ப்பு இருக்கிறதோ இல்லையோ நாம் ஈடுபடுகிறோம். இதன்மூலம் வெற்றி கிட்டிடின் மகிழ்கிறோம்! தோல்வி கண்டாலும், இதுவும் ஒரு நன்மைக்கே என்று எடுத்துக்கொள்ளும் கட்டத்தில் தானிருக்கிறோமே ஒழிய, 'ஐய்யயோ! தோற்றுவிட்டோமே! இனி என்ன செய்வது?' என்று மூலையில் போய் உட்காருவதில்லை!! சனநாயக முறையில், தேர்தல்கள் என்பவை தராசுபோல. இந்தத் தராசின் மூலம், எந்தக் கட்சியும் தன்னுடைய நிறைகுறைகளையும், வளர்ச்சியையும், வளராததன்மையையும் அறிந்துகொள்ளமுடியும். அதையொட்டி வேலை முறைகளையும், செய்யவேண்டிய பணிகளையும் செப்பனிட்டுக்கொள்ளமுடியும். அதிலும், திராவிட முன்னேற்றக் கழகத்தைப் பொறுத்தவரையில், தேர்தலில் இப்போதுதான் பழக்கப்பட்டு வருகிறது! பணமும் வசதிகளும், பிற இடத்து ஒத்தாசையும் பெறும் நிலையில் உள்ளவர்களல்ல நாம். நம்மையே நம்பி, நமது தோழர்களின் நன்கொடையையும் உழைப்பையுமே மூலதனமாகவைத்து, உழைக்கும் நிலையிலிருக்கிறோம். மலையை மோதிட, நம்மிடம் உள்ளதெல்லாம் கொள்கையும் குன்றாத ஆர்வமும்தான்! அந்தக்கொள்கையினைப்பரப்பிய அளவுக்கு ஒரு தேர்தல் பயன்பட்டதென்றால், அதுகூட வெற்றிதான், நமக்கு! புதுவை—காரைத் தேர்தல்களைப்பற்றி, மாயவரம் பொதுக்குழுவில் ஆலோசனை நடாத்தியபோதுகூட, தேர்தல் குழுவினர், நமக்குப் பிரமாதமான வாய்ப்புகள் இருப்பதாகச் சொல்லவில்லை.

ஏனைய கட்சிகள் தத்தமது கொள்கைகளை எடுத்துச் சொல்லும்போது, நாமும் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தலாமே, என்றே கருதினர். அந்தப்பணி, இத் தேர்தல் மூலம், இரு வட்டாரங்களிலும் சிறப்புற நடந்திருக்கின்றன! தினசரி நமது தோழர்களும், சந்திக்காத பலரைச் சந்திக்கவும், தாங்கள் சார்ந்திருக்கும் கழகத்தினைப்பற்றி விளக்கமுரைக்கவும்செய்திருக்கின்றனர்! என்றாலும், ஒருசில இடங்களாவது நமக்குக் கிடைக்கும் என்று நாம் கணக்கிட்டிருந்தோம். கணக்குத் தவறு, என்பதைக் காட்டியிருக்கிறது தேர்தல். அதற்காக, நாம் வருந்தவில்லை. மக்கள் மன்றத்துக்குள், இன்னும் நாம் நுழையவேண்டும், நம்முடைய பணிகளின் மூலம் அவர்தம் மனமெலாம் நிறைய வேண்டும் என்கிற உண்மையினைத் தெளிவாக உணரும் வாய்ப்பு ஏற்பட்டதென, இத் தோல்வியினை ஏற்றுக் கொள்ளுகிறோம்.

சனநாயகப் பாதையில், தோல்வியும் வெற்றியும் உருளும் சக்கரம்போல! ஒரே அடியாக வெற்றிமேல் வெற்றியும், தோல்விமேல் தோல்வியும் அவ்வளவு எளிதில், எந்தக் கட்சிக்கும் ஏற்பட்டுவிடமுடியாது. சாதாரணப் பொன்னாங்காணிக் கீரைகூட, ஆழ வேர் விட்டு விட்டால், சடுதியில் படுவதில்லையே! ஆலமரம்

போல் வேர்விட்டு, ஆகாயமளாவ வளர்ந்திருக்கும், காங்கிரசைச் சாய்ப்பதென்பது இலேசா!

தேர்தலில் ஈடுபட்ட தோழர்களுக்கு, எப்படியும் வென்றுவிடுவோம் என்கிற வேக உணர்ச்சியுடன் பாடுபட்ட உண்மைத் தொண்டர்களுக்கு, தோல்வி, துயரத்தையே தரும். ஆனால், தோல்விகளைச் சொந்த விருப்புவெறுப்போடு அணுகாது, பொதுநோக்கோடு பார்த்து, அலசி, அதன்மூலம் எதிர்காலப் பணிகளைச் செப்பனிட்டு, இன்றிலாவிடினும் நாளை, நாளையிலா விடினும் இன்னொரு நாள், மக்களின் மனபீடத்தில் அமராமல் போகோம் என்கிற மன உறுதியினையும், மங்காத சேவையுணர்ச்சியையும் பெறல்வேண்டும்.

கடந்த பொதுத்தேர்தல்களில், நாம் தோற்ற இடங்கள் பல! அப்படி நாம் தோற்றதனால்தானோ என்னவோ, இப்போது அப்படிப்பட்ட பல பகுதிகளில், நமது கழகத் தோழர்களின் இடையரு முயற்சிகளையும், ஏராளமாகப் புதுக் கழகங்கள் தோற்றுவிக்கும் பூரிப்பான நிகழ்ச்சிகளையும், காண்கிறோம். இதுதான் நமக்கும், மாற்றாருக்குமுள்ள பெரியதொரு வேற்றுமையாகும்! பணத்தை மூட்டை மூட்டையாகக் கட்டிவைத்துச் செலவழித்தவன், 'தோல்வி' எனக் கேட்டதும், 'ஐயோ! அப்பா!' என்று சாய்கிறான். வெற்றி பெற்றதும் பதவி நாற்காலியுண்டு எனும் நம்பிக்கையில் வாழ்ந்தவன், 'தோல்வி'யைக் கண்டதும், சோர்ந்து மூர்ச்சையடைகிறான். நாம், பணத்தால், தேர்தல் நடத்துபவர்களுமல்ல! பதவிக்கு ஆசைப்பட்டு, அதற்காகவே அரசியல் கட்சி நடத்துகிறவர்களுமல்ல! நமக்குக்கிடைப்பது வெற்றியானாலும், தோல்வியானாலும், இரண்டையும் கழக வளர்ச்சிக்கும், இலட்சிய வெற்றிக்கும் பயன்படுத்தும் நிலையிலிருப்பவர்கள். வெற்றி பெற்றதும், வீட்டுக்குப் போய்விடுகிறவர்களுமல்ல! தோல்வி என்றதும், அரசியலைக் கைகழுவிவிடும், சந்தர்ப்ப வாதிகளுமல்ல!! ஏனெனில், நமக்கு நிலையானதொரு இலட்சியமுண்டு.

புதியதோரு நாடுபெற்று; புதியதொரு அரசியலமைப்பை உருவாக்கி; புதுப்பாதை அமைக்கும், பொன்னான பணியை மேற்கொண்டவர்கள் நாம். அந்தப் பணிக்கு, இவையெல்லாம், எருவைப்போல! உரத்தைப்போல!! புதுவைக்காரைத் தேர்தல் முடிவுகளைக் கேட்கின்ற இதே காதுகளால் தான், "எப்போதையும்விட இப்போது கழகத்தில் அதிக உறுப்பினர்கள் சேர்ந்து வருகிறார்கள். சேர்ப்பதற்குத் தலைமைக் கழகம் கொடுத்த தவணை போதவில்லை, இன்னும் சேர்த்துக்கொண்டேயிருக்கிறோம்" என்கிற சேதியும் விழுகிறது. அடுத்தத் திங்கள் பூவிருந்தவல்லியில் செங்கற்பட்டு மாவட்ட மாநாடு, அதையடுத்து சென்னை மாநாடு என்கிற சேதியும் வருகிறது.

சென்றேன் கேரளம், பாலக்காட்டில் பேசினேன், கழகத்துக்கு அங்கே வளர்ந்துவரும் ஆதரவு கண்டேன் என்று, களிப்போடு சேதி தருகிறார் நமது துணைப் பொதுச்செயலாளர். கன்னடத்து முன்னாள் முதலமைச்சர் அனுமந்தையா, இல்லம் தேடிவந்து பொதுச் செயலாளரையும் ஏனைய தோழர்களையும் பேட்டிகண்டு சென்றார் எனும் சேதியும் கிடைக்கிறது. எனவே 'இந்து'வும் பிறவும் எழுதுவதாலேயே, கழகம் வளரவில்லை என்று கருதிவிட முடியாது! அப்படிச் சொல்வதற்காகவே, உள்ளவை அவை!! கழகம் வளரவில்லையென்றால், மேற்சொன்ன சேதிகள் கிடைக்குமா நமக்கு? இதனால், எல்லா ஊர்களிலும் கழகம் வளர்ந்து நாட்டிலுள்ள பட்டிதொட்டிகளெல்லாம் நமது பாசறையாகிவிட்டன, என்று நாம் வீம்புபேசவில்லை. நம்முடைய எண்ணங்கள் புகாத இடங்கள், ஏராளம்! நமது கழகத்தைப் பற்றியே அறியாதோரும் உண்டு! நாம் பெறவேண்டிய வளர்ச்சிகள் எத்தனையெத்தனையோ!! இருந்தாலும், மாற்றாரெல்லாம் கருதியதுபோல, மறைத்து ஒழித்துத் தேய்த்துக் கரைத்துவிடக்கூடிய, கட்சியாக இன்றில்லை நாம். உண்மையைச் சொன்னால் நடைபெற்ற புதுவை—காரைத் தேர்தலில், கழகத்தின் சார்பில் இத்தனைபேரை நிறுத்திவைக்கும் அளவுக்கு நாம் வந்திருப்பதே, ஒரு வெற்றிதான்! அப்பப்ப, திராவிட கழகமாகயிருந்த காலத்தில், மாநாடு ஒன்று நடத்த முனைந்து பாண்டிச்சேரியில் பட்டபாடு கொஞ்சமா! கழகக் கொள்கையே நுழைய முடியாது, கழகத்தின் பெயரைச் சொல்லியும், யாரும் உலவமுடியாது என்றிருந்த ஊரல்லவா அது!!

மதுவிலக்கு நாட்டின் முன்னேற்றத்திற்கு மிக அவசியம் என்று கொள்கை வகுத்துக்கொண்ட காங்கிரசின் முன்னோடிகளில் ஒருவரும், சென்னை முதல்வருமான கனம் காமராசர் புதுவை காரைப் பகுதிகளில் தேர்தல் பிரசாரம் செய்தபோது, "மதுவிலக்கை வற்புறுத்தமாட்டோம். இப்பகுதிகளைச் சென்னையுடன் இணைக்க வேண்டும் என்று வற்புறுத்தமாட்டோம்" என்று பேசியதைப் போல், நாம் கொள்கையை விற்பவர்களல்ல. எதைச் சொல்லியாவது தேர்தலில் வெற்றிபெற்றுவிட்டால் போதும் என்ற சிறுமதிபடைத்தவர்கள் நாமல்ல என்பதை இச்சமயத்தில் காங்கிரஸ் நண்பர்களுக்கு நினைவூட்டவிரும்புகிறோம்.

கிடைத்துள்ள தோல்வியினை மனதிலெண்ணி, இதுபோலத் தோல்விகள் இனி ஏற்படாத வகையில் அந்த இரு ஊரினரும், கழகப் பணியினைச் செய்தல் வேண்டும். அதேபோல, பிற இடங்களிலுள்ள கழகத் தோழர்களும், வரவிருக்கும் பொதுத் தேர்தலை மனதிலெண்ணி இப்போது முதலே, நல்ல பயிற்சியோடு, மக்கள் மன்றத்தில் பவனி வருதல் வேண்டும். தேர்தல் நேரத்தில், வாக்குகளைப் பதிய வைப்பதில் உற்சாகத்தைக் காட்டுவதில்லை நம்மவர்கள் என்கிற குறையிருந்து வருகின்றது. புதுவை காரையிலும், அப்பணியைச் செய்திருந்தால், இன்னும் அதிக வாக்குகள் பெற்றிருக்கலாம். அந்தப் பயிற்சியினை, இப்போது முதலே, நமது தோழர்கள் பெறல் வேண்டும்! இதுபோன்ற தோல்விகள் ஏற்படும்போதும், அதைச் சுட்டிக்காட்டி மாற்றார் நம் மனதைப் புண்படுத்தும் வேளையிலும், ஆத்திரமோ ஆயாசமோ கொள்வதற்குப் பதில், "இனியொரு தேர்தல் வரட்டும். வெற்றி கழகத்துக்கா, இல்லையா என்று காட்டுகிறேன்," என்று சூளுரைத்து, அதனையே எந்நேரமும் மனதிலெண்ணி, இடையறாமல் பணியாற்றுதலே, வெற்றிக்குள்ள வழி! இதனை, எல்லாக் கழகத் தோழர்களும், இச்சமயத்தில், அவரவர் உள்ளத்தில் ஆழப்பதித்துக் கொள்வார்களென நம்புகிறோம்!!

—[✽]—

கேரளத்தில் நடப்பதென்ன?

கேரளத்தின் இன்றைய அரசியல் சூழ்நிலை என்ன? இங்கு நடக்கும் கிளர்ச்சியின் நோக்கமென்ன? அது உருவான வரலாறென்ன? என்பனவெல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கு சரிவரப் புரிந்திருக்காது என்றே நான் நம்புகிறேன். இந்தக் கிளர்ச்சியை மேலெழுந்த வாரியாகப் பார்ப்போருக்கு இது ஒரு அரசியல் கிளர்ச்சியென்றே தோன்றும். ஆனால் அதன் பின்னே ஆழ்ந்து கிடப்பது வேறு. அது கேரளத்துக்கு வெளியே உள்ள மக்களுக்குப் புரிய வழியில்லை. ஏன்? இங்கு வந்து நிலைமைகளை மேலெழுந்த வாரியாக ஆராய்பவர்களுக்கும் அது எளிதில் புரியமுடியாது. கிளர்ச்சியின் உண்மை நோக்கத்தையும், அதன் வரலாற்றையும், சுருக்கமான முறையில் ஒருவாறு தமிழ் மக்கள் புரிந்துகொள்ளும் வகையில், நான் இதை எழுதுகின்றேன்.

இன்றைய கிளர்ச்சியில் பங்கு கொண்டிருக்கும் முக்கிய தலைவர்கள்:

மன்னத்து பத்மனுபன்
பட்டம் தாணுப்பிள்ளை
ஆர். சங்கர்
பனம்பள்ளி கோவிந்தமேனன்.

கேரளத்திலுள்ள முக்கியமான சாதிச் சங்கங்கள்:

1. எஸ். என். டி. பி. அதாவது ஸ்ரீநாராயண தர்ம பரிபாலனம்.
2. நாயர் சர்விஸ் சொஸைட்டி
3. கத்தோலிக்கர் திருச்சபை
4. தாழ்த்தப்பட்டோர் சங்கம்.

அரசியல் இயக்கங்கள்:

1. காங்கிரஸ் கட்சி
2. கம்யூனிஸ்ட் கட்சி
3. ஆர். எஸ். பி. (புரட்சி சோசலிஸ்ட்)
4. பி. எஸ். பி. (பிரஜா சோசலிஸ்ட்)
5. முஸ்லீம்லீக் (மத அடிப்படையிலுள்ள இயக்கம்)
6. தி. மு. க.

இதில் நான் முன் குறிப்பிட்ட மன்னத்து பத்மனுபன் என்னும் வயது முதிர்ந்த பெரியவர், நாயர் சர்வீஸ் சொஸைற்றியின் தலைவர்.

பட்டம் தாணுப்பிள்ளை, நாயர் சமுதாயத்தில் பிறந்தவர். பி. எஸ். பி. என்ற அரசியல் கட்சியின் கேரளத் தலைவர்.

இன்னும் நான் குறிப்பிட்ட எஸ். என். டி. பி. என்ற சாதிச் சங்கத்தில் நாராயண குரு பிறந்த ஈழவ சமுதாயத்தவரான கே. சுகுமாரன்.

சி. பி. செல்லம்

"கேரள கௌமுதி" என்ற தின இதழின் ஆசிரியரும் உரிமையாளரும் இவரே.

கே. அய்யப்பன், இவரைத் தமிழ் நாட்டில் சுயமரியாதை இயக்கத்துடன் தொடர்புகொண்டிருப்பவர்களுக்குத் தெரிந்திருக்கலாம். இவரும் ஈழவசமுதாயத்தவரே. சி. கேசவன் முன்னாள் திரு-கொச்சிசமஸ்தானத்தின் காங்கிரஸ் மந்திரி சபையில் முதன் மந்திரியாக இருந்தவர். இன்று அரசியலில் இருந்து ஒதுங்கியிருப்பவர்.

இம்மூவரும் ஈழவ சமுதாயத்தின் பிரபலஸ்தர்கள்.

நான் மேலே குறிப்பிட்ட சங்கங்களையும், அரசியல் இயக்கங்களையும், தலைவர்களையும் நன்றாக மனதில் பதியவைத்துக் கொள்ளுங்கள். பின்னால் நான் குறிப்பிடும் நிகழ்ச்சிகள் உங்களுக்கு விவரமாக விளங்கிவிடும்.

இன்றைய கேரளம் முன்னால் திருவிதாங்கூராகவும், கொச்சியாகவும், மலபாராகவும் பிரிந்திருந்ததென்பது நான் சொல்லாமலே எல்லோருக்கும் தெரிந்திருக்கும். திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் மன்னர் ஆட்சி நிலவியிருந்த நேரத்தில், இந்துக்களில் மேல் வகுப்பார் என்று கருதப்படும், நாயர் சமுதாயத்தாருக்கு மாத்திரமே அரசாங்கத்தில் பதவியும், படிப்பும், அந்தஸ்தும் கொடுக்கப்பட்டு வந்தது. நாயர் பட்டாளம் என்றே திருவிதாங்கூர்ப் பட்டாளத்தின் பெயரும் கூட இருந்து வந்தது. மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினரான ஈழவ சமூகத்தினரைத் தீண்டாதாரென்று ஒதுக்கி, அவர்களுக்கு எந்தவித சலுகையும் மறுத்து, இராசவீதிகளில் நடப்பதற்குள்ள உரிமைகள்கூட மறுக்கப்பட்டு, அவர்களை அடக்கியே ஆளப்பட்டு வந்தது.

இன்னும் மேல் நாட்டாரின் பின்பலத்தோடு கத்தோலிக்கர்கள் தங்களது மதக் கொள்கைகளைப் பரப்பத் திருவிதாங்கூர் மன்னர் இடமளித்திருந்தார். அவர்கள் ஏராளமான மேல்நாட்டுப் பொருளுதவி கொண்டு கத்தோலிக்க மதக் கொள்கைகளைப் பரப்புவதோடு, கல்வி வளர்ச்சிக்கென்று கத்தோ

லிக்கத் திருச்சபையின் பேரால் ஏராளமான பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தியும், கல்லூரிகள் ஏற்படுத்தியும் மன்னரின் ஒத்துழைப்புடன் மதப் பிரச்சாரமும் வளர்த்து வந்தனர்.

ஈழுவர்களைத்தவிரவும், ஆதித்திராவிட இனத்தைச் சேர்ந்த மக்கள், சொல்லத் தகுந்த எண்ணிக்கை கூடுதலாக உள்ளவர்கள் எந்த விதமான முன்னேற்றமும் இன்றி ஒடுங்கிக் கிடந்தார்கள். இவர்களிடையேதான் முக்கியமாகக்கிறிஸ்து மதம் பரப்பப்பட்டு வந்தது. கிறிஸ்தவர்கள் (கத்தோலிக்கர்கள்) ஆதிக்கம் வலுப்பெற்று வருவதைக் கண்ட அந்நாள் திவானாக இருந்த சி. பி. இராமசாமி அய்யர், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஆலயப் பிரவேசம் செய்து வைத்ததுடன், கத்தோலிக்கர்களின் ஆதிக்கம் வளர்ந்து வருவதைத் தடுக்கப் பல மறைமுகமான வழிகளையும் செய்தார். இந்நிலையில் ஈழுவ சமுதாயத்தினருக்கும் மற்றும் பிற்பட்ட வகுப்பினர்களுக்கும் அரசாங்க அலுவலகங்களிலும் கல்வித்துறைகளிலும்; விகிதாசார முறையையும் புகுத்தி நாயர் ஆதிக்கத்திலிருந்த உத்தியோகத் துறை பகிர்ந்தளிக்கப்பட்டது. இத்திட்டம், சி. பி. இராமசாமி அய்யருக்கு முன்னாலிருந்த திவான் அபிபுல்லாவின் காலத்தில் கொண்டு வரப்பட்டது. ஆனால் இராமசாமி அய்யர் திவானாக இருக்கும்போது வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தால்சிறிதளவுபாதிக்கப்படும் நாயர் சமுதாயம், சி. பி.யின் துணை கொண்டு அதை ஒழிக்கப் பார்த்தது. ஆனால் சி. பி. அதற்குத் துணை நிற்கவில்லை. ஆக, கத்தோலிக்கர்களின் வெறுப்பையும் நாயர் சமுதாயத்தின் விரோதத்தையும் சம்பாதித்தார் அய்யர். என்றாலும் அவர் அடக்கி ஆளுவதில் திறமைசாலியாக இருந்ததால் இவர்களைப் பொருட்படுத்தாமல் ஆட்சி நடத்தினார்.

கொச்சி சமஸ்தானத்தில், மேனன் என்னும் சமுதாயத்தவரும் நாயர் சமுதாயத்தவரும் ஒரே சமுதாயத்தவர்களே. அந்தந்தப் பிரதேசத்தில் வழங்கப்படும் ஜாதிப் பெயர்கள்தான் வேறு. மற்றப்படி இவ்விரு வகுப்பும் ஒன்றே. நான் மேல் குறிப்பிட்ட முக்கிய விஷயங்களும் கொச்சி சமஸ்தானத்திலும் நிகழ்ந்து வந்தவையே.

மலபார் பிரதேசம் சென்னையுடன் இணைந்திருந்ததால் அங்குள்ள மேல்வகுப்பைச்சார்ந்த மேனன்கள் சென்னை மாகாண நிர்வாக அலுவலகங்களில் தாராளமாக இடம் பிடித்திருந்தனர்.

வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டும் ஈழுவசமுகத்தினரும் மற்றும் பின்னேக்கச்சமுதாயத்தினரும் தாங்கள் பரம்பரையாகச் செய்துவந்த உடலுழைப்பு வேலைகளையே பெரும்பாலும் செய்து வந்தனர், வருகின்றனர். இன்னும் இந்த நாட்டில் உழவும் மற்றும் சகல உடலுழைப்பு வேலைகளையும், செய்வதற்குத் திறமையும் பழக்கமும் உள்ளவர்கள், ஈழுவர்களும் மற்றும் பிற்படுத்தப்பட்ட வகுப்பாருமே யாவர். இவர்களிடையே இவ்வளவு காலமாகியும் கல்வியறிவும் பதவியும் பெற்று வந்துள்ளோர் சிலரே. இவர்களது தொகை விதாசாரப்படிபார்த்தால், இவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் வசதி மிகவும் குறைவு என்றே அவர்கள் நம்புகிறார்கள். இவ்வளவு காலமாகியும் நாயர் சமுதாயத்தின் கால்பாக முன்னேற்றத்தைக்கூட இவர்கள் எட்டிப் பிடித்ததில்லை. இன்றும் இங்கு அரசாங்க அலுவலகங்களில் நாயர் சமுதாயத்தினரே பெரும்பாலாக ஏற்றம் பெற்று வருகிறார்கள். அந்த அளவுக்கு ஒடுக்கப்பட்டு விட்டன ஈழுவ சமுதாயமும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சமுதாயங்களும்.

ஆக, ஆதிக்க ஆசைகொண்ட நாயர் சமுதாயமும், கத்தோலிக்க சமுதாயமும் இந்தியாவில் வெள்ளையராட்சிக்கு எதிராகக் காங்கிரஸ் இயக்கம் வலுவான முறையில் உருப்பெற்று வருவதைக்கண்டு, திருவிதாங்கூரிலும் கொச்சியிலும் மன்னர்ஆட்சியை எதிர்த்துக் காங்கிரஸ் இயக்கத்தின் பேரால் போராடத்துவங்கியது. ஏனைய இந்தியப் பகுதிகளில் வெள்ளையராட்சியை எதிர்த்து நடந்த சுதந்திரப் போரில், கத்தோலிக்கர்களைக் காண்பது அரிதாக இருந்த அந்நாளில், திருவிதாங்கூரில் மட்டும் பெரும்பாலான கத்தோலிக்கப் பெரும் புள்ளிகள், அதாவது, பணத்தால் உயர்ந்தவர்கள், காங்கிரஸ் இயக்கத்தில் சேர்ந்து, வந்தேமாதரம், பாரதமாதாவுக்கு ஜே என்று கதர் உடையும், குல்லாயும் அணிந்த திரு உருவங்களாகக் காட்சியளித்த காரணம் என்ன? இந்திய தேசபக்தியாலா? அல்லது நேருமீதும் காந்தியார்மீதும் ஏற்பட்டுவிட்ட பக்தியாலா? அதுவும் அல்ல. உண்மையில் தங்களின் ஆதிக்கத்திற்கு இடையூறாக இருக்கும் திவான் இராமசாமி அய்யரை ஒழித்து, மன்னர் ஆட்சியும் அஸ்தமித்துவிட்டால், கேரள மக்கள் தொகையில் சொல்லத் தகுந்த எண்ணிக்கையுள்ள நாம் சுதந்திரமாகச் செயல்படமுடியும், கத்தோலிக்க மதக்கொள்கைகளைப் பரப்பமுடியும் என்று எண்ணியே காங்கிரஸ் போராட்டத்தில் ஈடுபட்டனர் கத்தோலிக்கர்கள்.

போராட்டம் வளர்ந்து வரலாயிற்று. காங்கிரஸ் இயக்கமும் வலுப்பெற்று வருவதைக் கண்டு மற்றும் சமுதாயங்களும், அதாவது ஈழுவ சமுதாயமும் பிற்படுத்தப்பட்ட சமுதாயங்களும், காங்கிரஸ் போராட்டத்தில் ஈடுபட்டன. இதற்குக் காரணம், போராட்டம் வெற்றிபெற்றால் மற்றச் சமுதாயங்களின் தனி ஆதிக்கம் வலுப்பெற்றுவிடுமென்ற நினைப்பிலேயே. நினைத்தபடி போராட்டமும் வெற்றி பெற்றது. இந்திய விடுதலையைத்தொடர்ந்து சமஸ்தானங்களிலும் மன்னர்களாட்சிக்கு முற்றுப்புள்ளிவைக்கப்பட்டது. ஆட்சியும் காங்கிரஸ் கட்சியின் கையில் மாறியது.

ஆனால், காங்கிரஸ் இயக்கத்தால் தொடர்ந்து ஆட்சி நடத்தமுடியாத நிலை ஏற்பட்டது. கட்சிக்குள்ளேயே இயற்கையாகப் புகுந்துவிட்ட ஜாதிப்பிணக்குகள் ஒன்றையொன்று எதிர்க்கத் துவங்கின. இதன் காரணமாகவே முதலாவது காங்கிரஸ் மந்திரிசபை—பட்டம் தாணுப்பிள்ளையின் தலைமையில் இயங்கிவந்த மந்திரிசபை, கத்தோலிக்கர்களின் பிணக்கால் கலைக்கப்பட்டு, டி. கே. நாராயண பிள்ளையின் தலைமையில் புதிய மந்திரிசபை அமைக்கப்பட்டது. என்றாலும் கட்சியினுள்ளே கத்தோலிக்கர்கள், வெறுப்பையும் விரோத உணர்ச்சிகளையுமே வளர்த்து வந்தனர். இதனால் அவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடனேயே மந்திரிசபை மறைமுகமாக இயங்கிவாலாயிற்று.

இந்து மண்டலம் தோன்றல்

இந்நிலையில் காங்கிரஸ் மந்திரி சபையும், இயக்கமும் கத்தோலிக்கர்களின் கைப்பாவையாக மாறி வருகிறது என்ற காரணம் காட்டி, நாயர் சமுதாயத்தின் தலைவரும் காங்கிரஸ் அனுதாபியுமாயிருந்த மன்னத்துபத்மனுபனும், காங்கிரஸ் கட்சிக்குள் இருந்த ஈழவசமுதாயத் தலைவர் ஆர். சங்கரும் சேர்ந்து காங்கிரஸ் கட்சியிலிருந்து வெளியேறி, இந்துக்கள் ஒற்றுமைப்படாவிட்டால் இந்த நாட்டிற்கு பெரும் ஆபத்து வரவிருக்கிறது என்றும், கத்தோலிக்கர் ஆதிக்கம் பெருகி வருகிறதென்றும் பறைசாற்றி, நாயர் ஈழவ ஒற்றுமையென்ற பேரால் இந்துமண்டலம் அமைத்தார்கள். கொல்லத்தில் நடத்தப்பட்ட இம்மாநாட்டிற்குக் காங்கிரஸ் கட்சியிலுள்ள பல நாயர் ஈழவ பிரமுகர்களும் வந்திருந்தனர். இவ்வமயம்தான் இந்துக்களின் புண்ணியஸ்தலமென்று நம்பப்படுகிற சபரிமலை அய்யப்பன் கோவில் தீக்கிரையாக்கப்பட்டது இது கத்தோலிக்கர்களின் செயலே என்பதை நாட்டில் எடுத்துக் காட்டிப் புரட்சியை உண்டுபண்ணிக் கத்தோலிக்கர்களின் அரசியல் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்கு இந்துமண்டல அமைப்பாளர்களுக்கு இது ஒரு துணையாக அமைந்தது. அந்நாள் டி. கே. நாராயணபிள்ளை மந்திரிசபையும் இச்சம்பவம்பற்றிய விசாரணை அறிக்கையை வெளியிட மறுத்ததும், இதில் நிச்சயமாகக் கத்தோலிக்கர்கள் கலந்துள்ளனர் என்பதை நாட்டு மக்கள் எண்ணவுமாகியது.

தொடர்ந்து டி. கே. நாராயணபிள்ளையின் மந்திரிசபையும் கலைக்கப்பட்டு, ஈழவ சமுதாயத் தலைவரான சி. கேசவன் தலைமையில் மந்திரிசபை அமைக்கப்பட்டபோது, ஈழவசமுதாயத்தினர்நாட்டில் அமைதியாக இருந்தனர். இந்து மண்டலத்தின் இயக்கம் தணுப்புற்றது.

ஜான் மந்திரி சபை

தொடர்ந்து வந்த பொதுத்தேர்தலில் காங்கிரஸ் கட்சி இந்துக்களின் செல்வாக்கை இழந்தது. பெயரளவிற்கே நாயர்களும் ஈழவர்களும் அதில் இருந்தனர். நாயர் சமுதாயத்தைச் சேர்ந்த பட்டம் தாணுப்பிள்ளை தன்னைக்காங்கிரசுக்குள் யாரும் மதிக்கவில்லை என்ற காரணத்தை மனதில் வைத்துக் கட்சியைவிட்டு வெளியேறி, பி. எஸ். பி.யில் சேர்ந்தார். இந்தக் காரணத்தினுலும் நாயர் சமுதாயத்தில் ஏராளமான பேர்களின் செல்வாக்கைக் காங்கிரஸ் இழந்தது. தேர்தலைத் தொடர்ந்து நடந்த கட்சிக் கூட்டத்தில் ஜான் தலைமையில் புது மந்திரிச் சபை அமைக்கப்பட்டது. தொடர்ந்து சி. கேசவனையே மந்திரியாக்கவில்லை என்ற கசப்பால், ஈழவ சமுதாயத்தினரும் காங்கிரஸ் இயக்கத்தைக் கைகழுவத் துவங்கினர். இவ்வாறு காங்கிரஸ் இயக்கம் கத்தோலிக்கர்களின் ஆதிக்கக் கூடாரமாக மாறியது.

கம்யூனிஸ்ட் கட்சி

இந்த நிலையில்தான் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு சிறு அரசியல் கட்சியாக நாட்டில் தொழிலாளர்களிடையே செயல்பட்டு வந்தது. கட்சிக்குத் தடை நீக்கப்பட்ட காலம் அது. காங்கிரஸ் இயக்கத்துடன் வெறுப்புற்ற மக்கள், பல அரசியல் இயக்கங்களையும் நாடிச்சென்றனர். அதிலும் சாதி சம்பிரதாயமே மறைமுகமாக நுழையப் பார்த்தது. பட்டம் தாணுப்பிள்ளை நாயர் என்ற காரணத்தால் மட்டுமே பி. எஸ். பி.க்கு இங்கு ஆதரவுள்ளது. அதுவும் கூடுதலாக நாயர்கள் மட்டுமே ஆதரவுகொடுத்து வருகின்றனர். தாணுப்பிள்ளை இன்று பி. எஸ். பி.யிலிருந்து விலகி ஆர். எஸ். பி.யில் சேர்ந்தால், இதைப் பின்பற்றுகிறவர்கள் நாளை அதில் சென்று சாய்வார்கள். பொதுவாக இங்கு சாதியையும், தனி நபர்களையும் வைத்தே இயக்கங்களே தவிர, இலட்சியப் பற்றுள்ள இயக்கங்களும் மனிதர்களும் மிகமிகக் குறைவு. இவைகளிலிருந்து ஓரளவு மாறுபட்டுக் காணப்பட்டது கம்யூனிஸ்ட் கட்சி. கம்யூனிஸ்ட் கட்சியில் கத்தோலிக்கர்களும், நாயர்களும், ஈழவர்களும் ஆதிக்க உணர்ச்சி இல்லாமலேசெயல்பட்டு வந்தனர். கட்சிக் கட்டுப்பாடும் ஓரளவு கொள்கைப் பிடிப்புமே இதற்குக் காரணமென்று சொல்லலாம். வெறும் தொழிற்சங்கங்களையே இயக்கி வந்த கம்யூனிஸ்ட் கட்சி, அரசியல் வெறுப்புற்றிருந்த நடுத்தர மக்களின் பார்வையைக் கவர்ந்தது.

மந்திரி சபைகள் மாறுதல்

இந்நிலைமையில் எதிர்க்கட்சிகளின் வளர்ச்சியைக் கண்டு காங்கிரஸ் கதி கலங்கியது. அது காரணமாக ஜான் மந்திரி சபையும் மறைந்தது. கோவிந்த மேனன் மந்திரிசபை அமைந்தது. அதுவும் மறைந்தது. ஒரு கட்சிக்கும் மெஜாரிட்டி இல்லாததால் மீண்டும் இடைத்தேர்தல் நடந்தது. அதிலும் காங்கிரசுக்குச் சரியான இடங்கள் கிடைக்கவில்லை. ஆதலால் பட்டம்தாணுப்பிள்ளை தலைமையில் பி. எஸ். பி. மந்திரி சபையை அமைக்கச்செய்து காங்கிரஸ் கட்சி அதற்குப் பின்பலம் கொடுத்தது. நாட்டில் கம்யூனிஸம் வளர்வதைத் தடுக்கக் காங்கிரஸ் செய்த (அதாவது கத்தோலிக்கர்கள் செய்த ஒரு தந்திரமே இது) இம் மந்திரி சபையும் தகர்ந்தது. மீண்டும் கோவிந்தமேனன் தமிழ்நாடு காங்கிரசின் ஒத்துழைப்புடன் மந்திரிசபை அமைத்தார். அதுவும் அதிக நாள் நீடிக்கவில்லை. பின் பிரசிடெண்ட் ஆட்சி ஏற்பட்டது.

இங்கு முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவென்ருல், கேரளத்தைப் பொறுத்தவரையில் சாதி சமுதாயங்களுக்கும், அதிலுள்ள பாதிரிகளுக்கும், இருக்கும் செல்வாக்கைப்போல அரசியல் கட்சிகளுக்கும், அதன் தலைவர்களுக்கும் இருப்பதில்லை. இதனுல் அரசியலைத் தத்தமது சமுதாயத்திற்குப் பயன்படும்விதத்தில் திருப்பிக்கொள்ள ஒவ்வொரு சமுதாயத் தலைவர்களும் சமுதாயத்தின் பெயரிலேயே அரசியல் கட்சிகளிலும் ஈடுபட்டுள்ளனர். எந்தக் கட்சியும் ஆட்சியை ஆட்டமின்றி நடத்திச் செல்ல ஏதாவதொரு சமுதாயத்தை மறைமுகமாக ஆதரித்து நிற்பது வழக்கமாகிவிட்டது. கம்யூனிஸ்ட் கட்சிக்கு பொதுவான எதிரி கத்தோலிக்கத் திருச்சபை என்பது உலகறிந்த

எவன் ஒருவன் மரணத்தைப் பற்றிப் பயம் கொள்ளுகின்றனே அவன் தைரியமுடையவனாக இருக்கமுடியாது. மரணபயம் இல்லாதவன்தான் தோல்வியைவிடச் சாவே பெரிதென எண்ணுவான்.

உண்மை. இந்த நிலையில் கேரளத்தில் கம்யூனிஸ்ட் கட்சி, மக்களிடையே செல்வாக்குப் பெற்று வருவதைக் கண்டு கத்தோலிக்க மதத்தினர் ஆத்திரம் கொண்டனர். அதன் காரணமாகக் கத்தோலிக்கர்களுக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும், அடிக்கடி மோதுதலும் எதிர்ப்புணர்ச்சியும் வளர்ந்து வரலாயிற்று. கம்யூனிஸ வளர்ச்சியைத் தடுப்பதற்கும், தங்களது ஆதிக்கத்தைக் கேரளத்தில் உறுதிப்படுத்திக்கொள்ளவும், ஏற்கனவே அவர்கள் பிடியிலிருந்த காங்கிரஸ் இயக்கத்தை, அவர்கள் இறுகப் பிடிக்கலாயினர். தவிரவும், கத்தோலிக்கர்களிடையில் பெரும் பணக்காரர்களும், தோட்ட முதலாளிகளும், பாங்க் உடைமைகளும் அதிகம். அவர்களும் கம்யூனிஸ வளர்ச்சியைக் கண்டு அஞ்சினர். ஏற்கனவே அரசியல் மாறுதல்களில் வெறுப்புத் தட்டிவிட்ட நாயர் சமுதாயத் தலைவர்களும் ஈழவ சமுதாயத் தலைவர்களும், அரசியல் நடவடிக்கைகளில் தீவிரம் காட்டாமல் ஒதுங்கி நின்றார்கள்.

கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றி

பரம்பரையாகவே உடல் உழைப்பையே தொழிலாகவும், தரித்திரர்களாகவே என்றென்றும் வாழ்க்கை நடத்தி வந்தவர்களும், நாயர் சமுதாயம் போன்ற மேல் ஜாதிக்காரர்களின் கொடுமைகளைப் பலகாலம் தாங்கி வருபவர்களுமாகிய ஈழவ சமுதாயத்தினரில் பெரும் பகுதியினர், கம்யூனிஸ்ட் கட்சியை நாடினர். அவர்களின் பின் பலத்தாலும் மற்றும் பின் தள்ளப்பட்ட சமுதாயத்தார்களின் ஒத்துழைப்பாலும் கம்யூனிஸ்ட் கட்சி சென்ற பொதுத் தேர்தலில் சட்டசபையில் கூடுதலான எண்ணிக்கை இடங்களை கைப்பற்றியது.

மற்றுமுள்ள அரசியல் கட்சிகளுக்கு ஒரு நிலையான சர்க்கார் அமைக்க முடியவில்லை. அவைகளின் உள்ளே கட்சிப் பூசல்கள் மலிந்துவிட்டன என்பன போன்ற எண்ணங்கள் நடுத்தர மக்களிடையே வளர்ந்து வந்ததும் ஒரு முக்கியமான காரணம் கம்யூனிஸ்ட் கட்சியின் வெற்றிக்கு.

[அடுத்த இதழில் முடியும்]

"ஆலோசனைப் பெட்டி"

—(ச. வெ. பாண்டியன்)—

"குடியரசு வளரவேண்டுமானால் மக்களின் விழிப்பு அவசியம். மக்களும் ஏதோ ஒருவரைத் தேர்ந்தெடுத்தோம் என்று இருந்துவிடக்கூடாது. உறுப்பினரும்தான் மக்களோடு கொண்ட தொடர்பை, தேர்தல் காலத்தில் மாத்திரம் என்று இல்லாது எப்போதும் வைத்திருக்க வேண்டும்" என்பர் அரசியல் வல்லுநர்கள்!

தி. மு. கழகம் சனநாயகத்திலே ஊறித்திளைத்த ஒன்றாகும். எனவேதான், சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி வாகை சூடியதும், 'இனி நமக்கென்ன கவலை" என்று வாளா இருந்துவிடவில்லை! மாறாக நமது மக்கள் தொடர்பும், அவர்களுக்காகச் செய்யும் பணிகளும் நாளும், நாளும் வளர்ந்துதான் வருகிறது என்பது கண்கூடு!

இவற்றையெல்லாம்விட மேயர் அவர்கள் மக்களின் தொடர்பை மேலும் பெறுவதற்காகப் புதிய முறை ஒன்றையும் மாநகராட்சி மன்றத்தில் ஏற்படுத்தியுள்ளார்கள்! அதுதான் "ஆலோசனைப் பெட்டி" முறையாகும்!

ஒரு காரியம் ஓரிடத்தில் செய்யப்படவேண்டும் என்று ஒருவர் கருதினால் அதுபற்றிய முழு விபரத்தையும் எழுதி அப்பெட்டிக்குள் போட்டுவிட்டால் போதும். உடனே "மேயர்" அதன் விபரத்தைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்வார். ஒரு பணிக்காகக் கூட்டம் கூட்டிப் பேசவேண்டுமானாலும், ஆலோசனைப் பெட்டி மூலம் தெரிவித்தால் "மேயர்" அதற்கும் வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்! இதுதான் "ஆலோசனைப் பெட்டி" நிறுவிய தன் நோக்கமும், குறிக்கோளுமாகும்.

இந்த முறையினால் மாநகராட்சி மன்றத்திற்கும், மக்களுக்கும் அதிகத் தொடர்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. மாநகராட்சி மன்றம் செய்யக் கருதியிருக்கும் வேலைகள் குறித்தும், மக்கள் தாம் எண்ணியிருக்கும் செயல் குறித்தும் இம்முறை மூலம் தொடர்பு கொள்ளும் போது தொடர்பு வலுக்கிறது. இத்தொடர்பு வளர, வளரச் செயலாற்றும் திறனும், மக்கள் விழிப்பும் பெருகுகிறது. முடிவில் சனநாயகம் வேர் விட்டு வளர நல்ல வழி ஏற்படுகிறது!

சாதாரண ஆலோசனைப் பெட்டிதான். ஆனால் சனநாயகத்திற்குச் சிறந்த அரணாக விளங்குகிறது.

ஆனால் எதிர்கட்சிக்காரர்களுக்கு இதுபற்றி எல்லாம் என்ன கவலை! "ஏதோ செய்கிறார்கள்" என்று சிலரும், "மாநகராட்சி மன்றத்தைக் கைப்பற்றிவிட்டார்களே" என்று அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டவர்களாகச் சிலரும்...... இப்படித்தான் காட்சியளிக்கிறார்களே தவிர, நாம் செய்யும் காரியங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்ததாகத் தெரியவில்லை!

அதிலும் காங்கிரசுக்காரர்களைப்பற்றிச் சொல்லவே வேண்டாம். ஆட்சி பறிபோனது கண்டு "குய்யோ முறையோ" என்று கூப்பாடு போடுகிறார்கள்! அவர்கள் பேச்சிலே 'சாராயவாடை' வீசுகிறது. எனவே குடிகேடர்களிடமிருந்து குணாதிசயமான பேச்சுக்களை எதிர்பார்ப்பதும் தவறுதான்! இப்படிப்பட்டவர்களுக்கு "ஆலோசனைப் பெட்டியின் 'அடிப்படை நோக்கம் காணீர்' என்று எடுத்துப் பேசுவது குருடன் முன் அழகைப்பற்றிப் பெரிதாகப் பேசுவதை ஒக்கும்.

எனினும் நாட்டில் சனநாயகம் பற்றி நன்குணர்ந்த பெரியவர்களும் இல்லாமலில்லை! அவர்

(12-ம் பக்கம் பார்க்க)

வேலை தேடிவந்த காளை!

காலை நேரம்.

ஒரு சிறிய வீடு. ஓடு வேய்ந்த அந்த வீட்டின் வாயிற்படியில் வேலன் நின்றுகொண்டிருந்தான். சிரிப்பையே காணமுடியாத அவன் முகத்தில், இன்று மகிழ்ச்சி கூத்தாடுகிறது. ஆவலுடன் எதற்காகவோ அவன் எதிர்பார்த்து நிற்கிறான் என்பது நன்றாக விளங்குகின்றது. அந்த உண்மையை முகக்கண்ணாடியில் அவன் எழுதிவைத்துக்கொண்டிருந்தான்.

ஆடிமாதம் பிறந்து, அதிலும் இருபது நாட்கள் ஓடிவிட்டிருந்தன. பலமாக வீசும் காற்றிற்குப் பயந்து, சிற்றிடையிலே கட்டியிருந்த சேலையிலேயே, தம்முடைய முழுக் கவனத்தையும் செலுத்தியவாறு, நான்கைந்து இளமங்கையர் சாலையிலே நடந்து வந்தார்கள். ஒரு காலத்திலே தம்முடன் ஒன்றாகப் படித்த வேலன், திரும்பிப் பார்க்க வேண்டும் என்பதற்காகக் கலகலவென்று சிரிப்பைக் காற்றிலே அலையவிட்டார்கள். சிரித்து மயக்கப் பார்க்கும் சுந்தரிகளை அவன் சட்டை செய்யாமல், தன் வீட்டிற்குச் சிறிது தொலைவிலே இருந்த இரயில் நிலையத்தையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தான்.

வேலன் இவ்வளவு அக்கறையோடு, யாரை இந்த விடியற்காலையில் எதிர்பார்க்கிறான்? வண்டியிலிருந்து அவனுக்கு வேண்டியவர்கள் யாராவது இறங்கிவர வேண்டுமா? ஒருவேளை, அவன் இதயத்தை அவனைக் கேட்காமலேயே எடுத்துச் சென்றவள், திரும்பவும் வந்து கொடுத்துவிட்டுப் போவதற்காக வருகின்றாளா?

வழக்கம்போல் காலம் கடந்து வராமல், ஒரு பதினைந்து நிமிடம் முன்னதாகவே, பெங்களூர் பாசஞ்சர் அன்று இரயில் நிலையத்திற்கு வந்துவிட்டது. ஆச்சரியத்திலும் இது ஒரு பெரிய ஆச்சரியமாகும்! எந்த மந்திரியாவது அந்த வண்டியிலே வந்திருக்கவேண்டும்! தபால் பையைத் தூக்கிச் சைக்கிளின்மேல் போட்டுக்கொண்டு, ஆமையைவிட விரைவாகத் தங்கப்பன் இரயில் நிலையத்திலிருந்து நகர்ந்து வந்துகொண்டிருந்தான். இந்த வேலையும் நிரந்தரம் இல்லையே என்ற கவலை, அவன் முகத்தில் ஒட்டிக்கொண்டு அழுதது. கவலை இல்லாத மனிதனே உலகில் இல்லை.

வி. ஆர். துரை

ஒவ்வொருவனுக்கும் ஏதாவதொரு கவலை இருக்கத்தான் செய்கின்றது. சின்ன மனிதனுக்குச் சிறிய கவலை. பெரியமனிதனுக்குப் பெரிய கவலை. ஒரு கவலை இறந்தால், இன்னொரு கவலை எங்கிருந்தோ திடீரென்று பிறந்துவிடுகின்றது.

அந்தத் தபால் பையைப் பார்த்ததும், வேலனுக்கு அளவற்ற மகிழ்ச்சி பொங்கிவிட்டது. தனக்கொருவேலை கிடைக்கும் உத்தரவு, அந்தப் பையில்தான் மாட்டிக்கொண்டிருக்கிறது என்று மனதிற்குள் பன்முறை நினைத்து மகிழ்ந்தான். இந்தத் தங்கப்பன் இவ்வளவு மெதுவாகப் போகிறானே, என்று அவனை நொந்துகொண்டான். வீட்டிற்குள் ஓடினான். வெளியே வந்து நின்றான். திரும்பவும் உள்ளே சென்றான். எங்கும் நிற்க முடியாமல், நேராக அஞ்சல் நிலையத்திற்கே ஓடிவந்துவிட்டான்.

எல்லோருக்கும் வந்திருந்த தபால்களைத் தனித்தனியாக மேசையின்மேல் தங்கப்பன் பிரித்து வைத்துக்கொண்டிருந்தான். அவன் அஞ்சல்நிலையத்தை விட்டு வெளியே வந்து கொடுக்கும் வரையில், பொறுத்துக்கொண்டிருக்க வேலனால் இயலவில்லை. அதற்குள்ளாகவே அந்த உத்தரவைத் தன் கையில் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று அவசரப்பட்டான். முகத்தைச் சன்னல் கம்பிகளுக்கு இடையே வைத்துக்கொண்டு, தங்கப்பன் சன்னல் பக்கமாக முகத்தைத் திருப்பும்போது, கேட்டுவிடலாம் என்று காத்துக்கொண்டிருந்தான். கால் வலியும் அவனுக்குத் தெரியவில்லை.

"தங்கப்பா! எனக்கேதாவது கடிதம்..." என்று வேலன் குரலை இழுத்தான். பொறுமையுடன் அவன் தேடிப்பார்த்து, வேலன் கையிலே ஒருகவரைக் கொண்டு வந்து கொடுத்தான். அனுப்பியவரின் முகவரியைக் கூடக் கவனியாமல், மடித்து உள்ளே வைக்கப்பட்டிருந்தக் காகிதத்தை, அவசரமாக எடுத்தான். எந்த ஊரில் அரசாங்கத்தார் வேலைகொடுத்திருக்கிறார்கள் என்பதைத் தெரிந்து கொள்ள அவனுக்கு அவ்வளவு ஆசை. ஆனால், அது வேலைக்கான உத்தரவு அல்ல! அவனுடைய பழைய நண்பன் ஒருவன், "இரண்டு வருடமாக நான் வேலை தேடிக்கொண்டிருக்கிறேன். நீ எங்கே வேலை செய்கிறாய்?" என்று கேட்டு எழுதியிருந்தான். இரும்புத் தண்டவாளத்தால் யாரோ

ஓங்கி அவன் மண்டைமேல் அடிப்பதைப்போல் வேலன் அதிர்ச்சி அடைந்தான்.

மீண்டும் அவனுக்கு ஒரு நப்பாசை, உள்ளத்திலே துளிர்விட்டது. திரும்பவும் தங்கப்பனைப் பார்த்து அவன் கேட்டபோது, "வந்திருந்தால் அப்பொழுதே கொடுத்திருக்க மாட்டேனா? அதை வைத்துக்கொண்டு மாடமாளிகையா நான் கட்டிக்கொள்வேன்?" என்று தனக்கிருந்த எரிச்சலை அவன்மேல் பாயவிட்டு ஆறுதல் அடைந்தான்.

வேலனுக்கு மயக்கமே வந்து விடும்போல் தோன்றியது. நின்ற இடத்திலேயே சிறிது நேரம் உட்கார்ந்துவிட்டான். வீட்டிற்கும் தபாலாபீசிற்கும் எத்தனையோ நாட்கள், அவன் நடையாய் நடந்து அலைந்திருக்கிறான். பட்ட கஷ்டத்திற்காகவாவது பலன் கிடைக்கக் கூடாதா? கடந்த ஆண்டைப் போலவே, இந்த ஆண்டும் ஒரு உத்தியோகம் கிடைக்காவிட்டால்...? குடும்பத்தோடு நஞ்சு குடித்துச் சாவதைத் தவிர வேறு வழியில்லை. வயதாகி வீட்டிலேஉட்கார்ந்துவிட்ட தாயையும் தந்தையையும் எப்படிக் காப்பாற்றுவது? அந்தக் கடமையை அவன்தானே எப்படியாவது செய்தாக வேண்டும்! இந்த ஆண்டிற்குள் தங்கையின் திருமணத்தை, எப்பாடு பட்டாவது நடத்தியாக வேண்டும் அல்லவா? இல்லாவிட்டால் அவளின் தங்க உடம்பு ஏக்கத்திலேயே எலும்பாகிப் போய்விடுமே! அது எவ்வளவு பெரிய கொடுமை. குழப்பமடைந்த அவன் கிட்டத்தட்டப்பைத்தியக்காரனின்நிலையை அடைந்தான். இன்னும் சிறிது தன்னை அவன் குழப்பிக்கொண்டால், நிச்சயமாகச் சிறுவர்கள் தெருவிலே நடக்கும்போது, கல்லாலும் சொல்லாலும் அவனை அடித்து விளையாடுவார்கள்.

மன நோய் அவனுக்கு உடல் நோயாக மாறிவிட்டது. அவனால் நடக்கவே முடியவில்லை. கண்கள் கலங்கிக் கொண்டிருந்தன. ஆறு திங்கள் நோயில் விழுந்தவனைப் போல், தள்ளாடித் தள்ளாடி நடந்தான். மகன் கொண்டுவரும் இன்பச் சேதியைக் கேட்டு மகிழ்வதற்காகத், தெருவிலே வந்து நின்றிருந்த பெற்றோர், வேலனை ஒன்றும் கேட்காமலேயே மூலைக்கு ஒருவராகச் சிதறிக் கைகளால் முகத்தைப் புதைத்துக்கொண்டு, கண்ணீர்விட்டுக் கதறி அழுதார்கள்.

இரண்டு நாட்களாகியும் அவன் சாப்பிடவே இல்லை. தண்ணீர் மட்டுமே தங்கையின் வேண்டுகோளுக்காகத் தொண்டைக்குள் போகவிட்டான். அதையாவது குடிக்காவிட்டால் அநியாயமாக, ஒரு உயிர் போய்விடுமே என்ற கவலை தங்கைக்கு. வேலன் பட்டினி கிடப்பதால் வேலை அவனுக்கு கிடைத்துவிடுமா? அதனால் யாருக்கு என்ன நஷ்டம்? உண்மையான அவன் உண்ணாவிரதத்தை, எந்தப் பத்திரிகையிலும் பார்க்க முடியாதே! ஒரு பிரபல தலைவராக அவன் இருந்தாலாவது பொதுமக்களும் நாட்டின் காவலர்களும் நேரிலே வந்து, விரதத்தைக் கலைவிடும்படி வேண்டுவார்கள். அவனோ அன்னக்காவடி! காலத்தை ஒட்டி அதற்கேற்ற முறையைக் கையாளவேண்டும்.

யார் யாரையோ பெரிய மனிதர்கள் என்று கூறினார்கள். அவர்கள் எல்லாம் செல்வத்திலே மலைகளாக இருந்தார்கள். ஆனால், அறிவிலே எலிகளாக இருந்தார்கள். யோக்கியமான ஒரு மனிதரைக் கூறும்படி வேலன் வேண்டினான். ஒருவரின் பெயரைச் சொல்லி, அவர் சிபார்சு செய்தால் உனக்கொரு வேலை கிடைப்பது, கல்மேல் எழுத்து என்று சிலர் ஆலோசனை கூறினார்கள். அதிகமாகப் படிக்காவிட்டாலும், அறவே படிப்பு வாசனை இல்லாதவராக அவர் இருக்கவில்லை. பேச மட்டுமே தெரிந்தவராக இல்லாமல், பேச்சொடு செய்கையும் இருக்க வேண்டும் அல்லவா? சட்டசபையிலே அவர் எம். எல். ஏ. யாக இருந்தவர் என்றும் சொல்லிக் கொண்டார்கள். இப்பொழுதெல்லாம் தேர்தலுக்கு நிற்பதை, அவர் அறவே வெறுப்பதாகவும் கூறினார்கள். எம். எல். ஏ என்றதும், எப்படியும் அவரைப் பார்த்தால், நமக்கொரு வேலை கிடைக்கும் என்று வேலன் நம்பினான்.

தாமோதர முதலியார் தொந்திக்குக் கீழே கட்டியிருந்த வேட்டி, அவிழ்ந்தும் அவிழாமலும் இருந்தது. இரண்டு கால்களையும் ஒரு சிறிய ஸ்டூலின்மேல் தூக்கிவைத்துக்கொண்டு, தம்முடைய பெரிய உடம்பைச் சாய்வு நாற்காலியில் போட்டிருந்தார். அவரின் ஆசை மகளான அமுதவல்லி, வெட்டிவேர் விசிறியால் அப்பாவுக்கு விசிறிக் கொண்டிருந்தாள். அந்த வராந்தாவின் சுவரைக் காஷ்மீர் இயற்கைப் படங்கள் அழகு செய்துகொண்டிருந்தன.

பதினேழு பதினெட்டு வயதை அமுதவல்லி விழுங்கி விட்டிருந்தாள். இன்னும் அந்த இள வயது மங்கைக்கு, யாரையாவது கட்டிக்கொண்டு இன்பத்தை எடுத்து உண்ணவேண்டும் என்ற ஆசை எழாமலேயே இருந்தது. புத்தகம் படிப்பதிலும் விளையாடுவதிலும், தந்தைக்கு உதவி செய்வதிலும், காலத்தைக் கழித்து வந்தாள். காதல் கதைகளைப் படிக்கும்போது அவள் உணர்ச்சி வயப்படுவது உண்டு. ஆனாலும் திடுமெனத் தோன்றும் உணர்ச்சி வெள்ளத்திற்கு அடிமையாகாமல், கட்டுப்படுத்தி எளிதாக வெல்லும் தன்மையையும் அமுதவல்லி நன்கு கற்றிருந்தாள். மகளைப் போலவே தந்தையும் அவளிடம் நல்ல அன்பு கொண்டிருந்தார். அவர் காட்டும் அதிக அன்பினால்தான், ஈராண்டுகளுக்கு முன்னால் இறந்துவிட்ட தன் தாயையும், அறவே அவள் மறந்துவிட்டிருந்தாள்.

முதலியாருக்கு இரண்டாவது மனைவியாக, பெங்களூரிலே இருந்து ஒருத்தி வந்தாள். ஒரு கணம் யோசித்துப் பார்த்திருந்தால், தாமோதரம் இவ்வளவு பெரிய தவறைச் செய்திருக்கமாட்டார். பலருக்குப் புத்தி சொல்லுகின்ற அவரே, இவ்வளவு பெரிய குற்றத்தைச் செய்திருக்கவேண்டாம். தவறு யார் செய்தாலும் தவறு தான். வேலியே பயிரை மேய்வது இமாலயத் தவறு அல்லவா? பலரும் தன்னைப்பற்றி இழிவாகப் பேசிக்கொள்ளுவது, அவரின் செவியிலும் விழுந்தது. தேள் கொட்டிய திருடனைப்போல் விழித்தார். நல்லவன் என்று பெயரெடுக்க எவ்வளவோ காலமாகின்றது. ஆனால், கெட்டவன் என்னும் 'புகழை'ச் சம்பாதிக்க, ஒரு நிமிடம்கூடத் தேவையில்லை.

இயற்கையாகவே பெண்கள், தம்முடைய அழகுக்காக ஆடை அணிந்து சிங்காரித்துக் கொள்வதிலே ஆசை கொண்டவர்களாக இருப்பார்கள். ஆனாலும், மனைவி

யாக வந்து சேர்ந்த அந்த பெங்களூர்ப் பெண்மணியோ, ஆபாசமாகச் சிங்காரித்துக் கொள்வதை ஒரு கலையாகக் கருதினாள். சற்றேறக் குறைய முக்கால் நிர்வாணம் என்று சொல்லலாம். கெட்டியாகக் கண்களைத் தாமோதரம் மூடிக் கொள்வார். அருமையாக வளர்த்த மகள், அவளால் கெட்டுவிடுவாளோ என்றும் பயந்தார்.

ஒரு குடும்பப்பெண்ணாக இருக்க அவள் விரும்பவில்லை; வெறுத்தாள். அதற்குரிய குணமும் பண்பும் ஒழுக்கமும், அவளிடம் மருந்திற்குக்கூடக் காணமுடியவில்லை. ஒழுக்கங்கெட்டநாடோடியைப்போல் நடந்துகொண்டாள். ஒரு சினிமாவை ஐந்தாறுமுறை பார்க்கின்ற பழக்கத்தை வைத்துக்கொண்டிருந்தாள். உள்ளூரில் பார்க்கின்ற சினிமா போதாதென்று, வெளியூருக்கும் கார் எடுத்துக்கொண்டு உல்லாசமாகக் கிளம்புவதை முதலியாரால் தடுக்க முடியவில்லை. மெல்லவும் முடியாமல் துப்பவும் இயலாமல் தாமோதரம் படுகின்ற வேதனையை, மெலிந்துவிட்ட அவர் பெரிய உடம்பே பளிச்சென்றுகாட்டுகின்றது. எதையோ ஒன்றை மனதில் வைத்துக்கொண்டு, முடித்துவிட்ட இரண்டாவது மணம், இவ்வளவு பெரிய விபரீதத்தில் கொண்டுபோய் விடுமென்று கனவிலும் அவர் எதிர்பார்க்கவில்லை.

மகளாகிய அமுதவல்லியைப் பெங்களூர்ப் பெண்சாதி ஓயாமல் வாழ்த்துவதையும், தன்னையே சில சமயங்களில் தூக்கியெறிந்து அவள் பேசுவதையும் நினைந்து வருந்தி, அறையின் கதவைச் சாத்திக்கொண்டு தாமோதரம் கண்ணீர் விடுவார். அப்போதெல்லாம் அமுதவல்லி ஆறுதல் கூறி, அப்பாவின் கண்ணீரைத் துடைப்பாள். பூத்துக் குலுங்கும் அந்த மலரின் கமல விழிகள், கொட்டும் கண்ணீரைத் துடைப்பது யார்? இரண்டு பேருமே விரைவில் செத்துத் தொலைந்தால், நமது சுகத்திற்கு ஒன்றும் பஞ்சமிருக்காதே என்று, முதலியாரின் மனைவி கணக்குப் போட்டாள்.

*

வேலன் வெளியிலேயேநின்றான். காவல் இல்லாத காம்பவுண்டுச் சுவரின் வழியாக நுழைந்து, தாமோர்தர் முதலியாரைப் பார்க்கத் தயங்கினான். பெரிய மனிதர்களிடம் பேசிப் பழக்கமில்லாத அவனுக்கு மிகவும் பயமாக இருந்தது. அப்போது திறந்த கார் ஒன்று, முதலியாரின் பங்களாவை நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது. எப்படியும் அதில் தாமோதரம் வருவார் என்று, காம்பவுண்டிலிருந்த கேட்டிற்கு அருகில் வேலன் ஓடிப்போய் நின்றான். ஆண்களின் வாசனையே அந்தக் காரில் இல்லை. காரை ஓட்டிவந்த கட்டழகி, அவன் மீது அலட்சியமாக வீசிய பார்வை வேலனுக்கு அருவருப்பையே கொடுத்தது. முதலியாரின் மனைவி இப்படிஅலங்கோலமாக அலங்காரம் செய்து கொள்ளுவாள் என்றுஅவனுக்குத் தெரியாது! வேலனுக்குஎன்னவோ ஒருமாதிரியாக இருந்தது. நேராக வீட்டிற்குத் திரும்பிவிடலாமா என்று அவன் யோசித்தான்.

வேலைக்காரன் ஒருவன்வெளியே வந்தபோது, வேலன் அவனை அண்டினான். விஷயத்தை அவன் விளக்கியதோடு நில்லாமல், வேண்டிய தைரியத்தையும் அவனுக்கு வழங்கினான். பெரிய வீட்டு வேலைக்காரர்களைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! எல்லாவற்றையும் கவனித்துக்கொள்ளும் சுகபுருஷர்களாயிற்றே அவர்கள்! தன் மனதை ஒருவாறு திடப்படுத்திக் கொண்டு, வேலன் உள்ளே நுழைந்தான். பங்களாவின் முன்னால் நந்தவனம் போல் மண்டிக்கிடந்த மலர்ச் செடிகளின் மத்தியில் இருந்த வழியில், பயந்தவாறே வேலன் நடந்து சென்றான். எப்போதும் போல் வீட்டின் வராந்தாவில் முதலியார் சாய்ந்திருந்தார். அமுதவல்லி கையில் விசிறியுடன் நின்றிருந்தாள், பயபக்தியோடு அவரின் எதிரே நிற்கும் வேலனைப் பார்க்கும்போது பரிதாபமாகஇருந்தது.

வந்து நின்ற இளைஞனைக் கடைக்கண்ணால் நோக்குவதும், வாய்க்குள் ஒரு பாட்டை மெல்லுவதும், தந்தையைக் கவனிப்பதும், அமுதவல்லியின் வேலையாக இருந்தது. இப்பொழுது, அவள் அறவே தந்தையை மறந்து, வேலனை ஓரக் கண்ணால் பார்த்து மகிழ்வதில் மும்முரமாக ஈடுபட்டு இருந்தாள். "அப்பா! ஒருவர் இங்கு வந்து வெகு நேரமாக நின்றுகொண்டிருக்கிறார்" என்றாள். மகளின் தாழ்மையான விண்ணப்பத்தை, முதலியார் தன் செவியில் ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. அமுதாவிற்குத் தந்தை கவனிக்காமல் இருப்பது, பெரிய வருத்தத்தைக் கொடுத்தது. அவளையும் அறியாமல் விசிறிக்கொண்டிருந்த தொழிலானது நின்றுவிட்டு இருந்தது. ஏற்கெனவே வேலனுக்கு இருந்த பயமானது கூடுதலாகி, அவன் உடம்பில் சிறு நடுக்கமும் ஏற்படலாயிற்று. கண் முன்னே நடக்கும் எல்லா விளையாட்டையும் தாமோதரம் கவனித்துக்கொண்டுதான் இருந்தார்.

காரில் வந்த கட்டழகி, வேலைக்காரர்களிடம் அதட்டி வேலை வாங்கிக் கொண்டிருந்தாள். அவர்களும் இவள் என்றால் அதிகமாகப் பயந்தார்கள். "அமுதா!" என்றவள் உள்ளிருந்து முழங்கினாள். அப்பாவிடமிருந்து சிட்டாக அமுதவல்லி பறந்தாள். "ஒரு வாலிபனின் முன்னால் நிற்பதற்கு, பருவ மங்கையாகிய உனக்கு வெட்கம் இல்லை!" கன்னி அமுதா, இதைக்கேட்டு வாய்விட்டுச் சிரிக்கவில்லை. பெண்ணிற்கு நாணம் இருக்கவேண்டும் என்பதைச் சித்தியும் புரிந்துவைத்துக் கொண்டிருக்கிறாளே என்று வாய்திறந்து சொல்லாவிட்டாலும் மனதிற்குள் அமுதவல்லி நினைத்துக் கொண்டாள்.

"என்ன வேண்டும்? யார் நீ?"- வேலனைப் பார்த்து தாமோதரம் கத்தினார். கண்ணீர் மல்க அவன் தன் கதையைச் சுருக்கமாகக் கூறி முடித்தான். அப்பொழுதே மனு ஒன்று எழுதிக் கொடுக்கச் சொல்லிக் கட்டளைபோட்டு, அதைக் கையிலே வாங்கிக் கொண்டார். "மூன்று நாள் கழித்து என்னைப் பார்க்க வரும்போது, ஒரு நூறு ரூபாயோடு வந்து சேர்ந்தால், வேலைக்கான உத்தரவை உன்னி

ஒரு சிந்தனை தோன்றியவுடன் அதைப் பிறருக்குத் தெரிவிக்க வேண்டும் என்கிற பேராவலை மனிதனுக்கு இயற்கையன்னை அருளியிருக்கிறாள். இதை ஒவ்வொரு கலையிலும் விஞ்ஞானத்திலும் காணலாம். ஒரு புது உண்மையை வெளியிட மனிதன் துடியாய்த் துடிக்கின்றான். அதே மாதிரி மற்றொருவன் அதைக் கேட்க ஆவலாயிருக்கிறான்.

டம் நானே தருகின்றேன்'' என்று சாதாரண குரலில் சொல்லிவிட்டு, சட்டென்று எழுந்து உள்ளே போய்விட்டார் அதிகாரிகளிடம் மிக்க செல்வாக்கு அவருக்கு இருந்தது.

வேலன் அங்கிருந்து சோர்வுடன் வெளியேறினன். அவன் சிந்தனையில் நூறுரூபாய் எதிரொலித்துக் கொண்டிருந்தது. இன்னும்அவன் முழுசாக ஐந்துரூபாயைச் சரியாகக் கண்டதில்லையே! எந்த வழியில் நூறு ரூபாயைச் சம்பாதிப்பது? என்ன உலகம்! என்னிடமும் தாமோதரம் பணத்தை எதிர்பார்க்க வேண்டுமா? வாங்கவேண்டியவர்களிடம் தாராளமாகப் பணத்தை வாங்கி, என்னைப்போன்றவர்களுக்கு உதவி செய்தால், வாழ்நாள் முழுவதும் கோயிலாகிய நெஞ்சிலே தம்மைவைத்துத் தினம் தினம் பூசை செய்வார்கள் என்பதைத் தாமோதரம் உணரக் கூடாதா? வெளியிலே பெரிய மனிதர்களாகக் காட்சி அளிப்பவர்கள், உள்ளே சின்ன மனிதர்களாகத்தான் இருக்கிறார்கள்' என்னவெல்லாமோ அவன் மனம் நினைத்து ஏங்கியது.

"என்னப்பா! அவரோ பரம ஏழையாக இருக்கிறார். எங்கிருந்து நூறு ரூபாயைக் கொடுப்பார்?'' அமுதவல்லி சமயம் பார்த்து, நேராகவே தந்தையிடம் கேட்டாள். வேலை தேடி வந்த காளைக்காக மகள் பரிந்துபேசும் உட்கருத்தைத் தாமோதரத்தால் சுலபமாகப் புரிந்துகொள்ள முடிந்தது. இந்தச் சாதாரண உண்மையை எல்லாம் தெரிந்துகொள்ள, உளநூல் வேறு கற்கவேண்டுமா? முகத்தில் எந்த வித உணர்ச்சியையும் அவர் காட்டிக் கொள்ளவில்லை. மகளிடமும் ஒன்றும் சொல்லவில்லை. அவளும் மீண்டும் அந்தப் பேச்சை எடுக்கவில்லை. "குடிக்கச் சிறிது தண்ணீர் கொண்டுவந்து கொடுத்துவிட்டுப் போய்ப் படுத்துறங்கம்மா'' என்று சொல்லி மேலும் அவளை அங்கேநிற்கவிடாமல், தாமோதரம் வீட்டிற்குள் அனுப்பிவிட்டார். தன் அறையில் விரிக்கப்பட்டிருந்த பஞ்சணையில், படுத்த அமுதாவின் இதயத்திலிருந்த இன்பச் சுமையானது பெருமூச்சாகச் சிறிது வெளியேறியது.

[அடுத்த இதழில் முடியும்.]

8-ம் பக்கத் தொடர்ச்சி

களுக்கு நமது செயலின் நோக்கம் புரியாமலும் இல்லை;

சென்னையிலே இருந்து வெளிவருகிற, ஆங்கில மாத வெளியீடான "பிராட்வே டைம்ஸ்'' என்ற பத்திரிக்கையின் ஜூன்மாத வெளியீட்டில் இவ்வாலோசனைப் பெட்டி பற்றி ஒரு கட்டுரை வெளிவந்திருக்கிறது. அது நமது மேயரின், செயலுக்கு ஒரு நற்சாட்சிப் பத்திரமாகும், இவண் எடுத்துக் காட்டுவதன் நோக்கம் 'பாரீர் எங்கள் மேதாவிலாசத்தை' என்று எடுத்துக் காட்டுவதற்கல்ல; சனநாயகத்தைப் பேணும் தன்மை இருக்கிறது என்று குறிப்பிடத்தான்.

"பிராட்வே டைம்ஸ்'' கூறும் விளக்கமாவது:- "புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மேயர் அவர்கள், மாநகராட்சி மன்ற நிர்வாக ஆட்சியில் ஒரு புதிய பாதை வகுத்துள்ளார்கள். இது (ஆலோசனைப் பெட்டி முறை) தற்போது புதியதாகத் தோன்றினலும் அதனுடைய வரலாற்றை நோக்கும்போது 'ஏதேன்ஸ்' நாட்டில் நேரடி சனநாயகம் இருந்த காலத்தில் நடைமுறையில் இருந்த ஒன்றாகும்'' எனக் கூறியுள்ளது.

மேயரின் முயற்சி புதியபாதையாகும்!

இது 'ஏதன்ஸ்' நாட்டில் நடந்ததுபோல் நேரடி சனநாயகமாகும்!!

அரசியல் வித்தகர்களின் கூற்றுப்படி சனநாயம் வளர இது போதாதா?

அப்பத்திரிகை இதோடுநின்றுவிடாமல் மேலும் இப்பெட்டிமுறை எங்கெங்கு வைக்கப்பட வேண்டும் என்றும் கூறியிருக்கிறது.

"சர்க்கார் அலுவலகங்களிலும் இப்பெட்டிமுறை வைக்கப்பட வேண்டும். இதன்மூலம் மக்களின் கோரிக்கைகளைப் பெற்று அவர்கள் தங்கள் வேலைகளைச் செவ்வனே செய்ய முடியும். மக்கள் எவ்வாறு ஒத்துழைக்கிறார்கள் என்பதை அறிவதற்கும் வாய்ப்பேற்படும். இந்த "ஆலோசனைப் பெட்டியை நமது சட்டசபையிலும், டெல்லிப் பாராளுமன்றத்திலும் வைத்தால் சிறந்த பயன் கிடைக்கும்...''

நிர்வாகத் துறைகளில் வைக்கலாம், ஏன் டெல்லியிலும், சென்னையிலும் உள்ள பாராளுமன்ற, சட்டசபைக் கட்டிடங்களிலும் வைக்கலாம் என்று ஆலோசனை கூறுகிறது "பிராட்வே டைம்ஸ்.''

இது நமது பத்திரிகையல்ல! நம்மை ஆதரிக்கின்ற பத்திரிகையும் அல்ல 'பெரியவர்கள்' கடாட்சம் பெற்ற பத்திரிக்கையாகும். 'தி. மு. க-வும்,பொதுவுடைமையினரும் வேகமாகத் தாக்கி ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டாலும் எதிர்காலத்தில் இவை இரண்டும் இணையக் கூடியன'' என்பதாகத் தனது ஜூலை மாத இதழில் உலகுக்கு எச்சரிக்கை கொடுத்த ஏடாகும்!

இப்படிப்பட்ட பத்திரிகைதான் நமது மேயரின் செயலிலே உள்ள நியாயம்பற்றி எழுதுகிறது!

ஒன்று மாத்திரம் உண்மை! நாம் "புதியதை''ச் செய்திருக்கிறோம்! அது சனநாயகத்தை வளரச்செய்யும்! இது காங்கிரசுக்காரர்களுக்கே வழிகாட்டக் கூடியது.

தமிழ்நாட்டின் ஒவ்வொரு பெண்ணும் தவறாது படிக்கவேண்டிய நூல்!

மா. கி. தசரதன்

எழுதிய

மனங்கவர் குடும்பக் கதை

கதாநாயகியின் கண்ணீர்த் துளிகள் ஒவ்வொன்றும் நெருப்பாகி நீதி கொன்றவர்களின் எண்ணங்களை நீறாக்கும் புதிய இலக்கியம்!

"தணலில் தங்கம்"

தனிப்பிரதி ரூ. 1--50

தபால் செலவுடன் ரூ 1--60

விற்பனையாளருக்குக் கழிவு 25%

தேவையுள்ள விற்பனையாளர்கள் எழுதுக.

"தென்றல்"

சென்னை-6.

ஏதனால் இறந்தான்?

—(தமிழ்க்கூத்தன்)—

வேலன் என்ற இளைஞன், சுக்கான் ஆற்று 'முனி' அடித்து இறந்துவிட்ட செய்தி, காட்டுத்தீயென ஊரெங்கும் பரவியது. அதைப்பற்றித்தான் பலர் பல கோணங்களிலே நின்று விமர்சித்தனர்.

வேலன் மிகவும் கோழையாக இருந்தவன். பிறகு,—பகுத்தறிவு இயக்க ஏடுகளைப் படித்ததின் காரணமாகவும், பொதுக்கூட்டங்களுக்குச் சென்று வந்ததனாலும், சீர்திருத்த நோக்குக் கொண்டவனாக மாறினான். அதோடு பேய், பிசாசு, போன்றவைகளில் நம்பிக்கையை இழந்தான். இருந்தாலும் அவைகளில் முழு நம்பிக்கையை இழந்துவிடவில்லை. உள்ளுக்குள் சற்றுப் பயம் உள்ளவனாகவே இருந்தான். ஆனால் வெளியில் பேய், பிசாசு, என்பதெல்லாம் வெறும் பிரேமைதான் என்று வாதாடுவான்.

பேய், பிசாசுகளில் கொஞ்சம் கூட நம்பிக்கையற்றவர்களுக்குக் கூட இருட்டைக் கண்டவுடன் முதலில் ஒரு திகில் ஏற்பட்ட பிறகேதான் சமாளிக்க முடிகிறது. அதற்குக் காரணம் சிறுவயதிலிருந்தே, குழந்தைப் பருவத்திலிருந்தே நமக்குப் பயத்தை ஊட்டிவிடுகிறார்கள் நமது பெற்றோர்கள். அந்தப் பயம் நமது குருதியுடன் கலந்துவிடுகிறது. நமது நாட்டில் உள்ள பெண்களின் மேலாடை நழுவிவிட்டால் இயற்கையாகவே அவர்களின் கை தானாகவே சரிசெய்துகொள்கிறது; ஆனால் சில நாடுகளில் மேலாடை இல்லாமலே பெண்கள் இல்லையா? இதற்குக் காரணம் பழக்கம்தானே!

மேலை நாடுகளில், தன்னுடைய வேலைகளைத் தானே செய்துகொள்வதிலிருந்து, பெரியோர்களிடம் மரியாதையாக நடந்துகொள்வதுவரை, தன்னுடைய குழந்தைகளைச் சிறுவயதிலிருந்தே பழக்குகிறார்கள். ஆனால் நமது நாட்டிலோ, சிறு குழந்தைகளுக்கு— அங்கே போகாதே; இங்கே போகாதே, அங்கே போனால் அஞ்சு கண்ணன் பிடித்துக் கொள்வான், இங்கே போனால் பூச்சாண்டி பிடித்துக் கொள்ளும் என்று பயமுறுத்துவதிலிருந்து, அம்மாவை ஏசு அப்பாவை உதை என்று சொல்லிக் கொடுப்பதுவரை பழக்கி வைக்கிறார்கள் நமது பெற்றோர்கள்.

கிராமத் தலைவர் உள்ளிட்ட பஞ்சாயத்தார்கள் கூடினர், வேலன் இறந்த இடத்தில். அவனுடைய நண்பர்கள், முன்தினம் நடந்த நிகழ்ச்சிகளை வாக்குமூலமாகக் கூறியதிலிருந்தும், வாயிலும் மூக்கிலும் இரத்தம் கசிந்திருந்ததன் காரணமாகவும். வேலன் 'முனி' அடித்துத்தான் இறந்திருக்க வேண்டும், என்று முடிவு செய்தனர். பிறகு சவம் அடக்கம் செய்யப்பட்டது. வேலனின் பெற்றோர்கள் அழுதனர், புலம்பினர், இருந்தும் என்ன பயன்? இறந்தவர்கள் மீண்டும் உயிர் பிழைத்து வருவதில்லையே!

அவனுடைய நண்பர்களிடம் இருந்து கிடைத்த வாக்குமூலம் இதுதான். சில இளைஞர்களிடையே வேலன் இறப்பதற்கு முன்தினம் ஒரு சிறு பிரச்சினை எழுந்தது.

"நேற்று இரவு, நான் ஐயனார் கோவில் சங்கிலிக்கருப்பன் அடித்து,செத்திருக்கவேண்டியது" என்றான் ஒருவன்—

ஏண்டா...!...? என்றான் மற்றொருவன். நேற்று இரவு ஒரு மணி இருக்கும் உச்சிமேட்டுக்குப்போய் நாடகம் பார்த்துவிட்டு வரும்பொழுது ஐயனார் கோவிலைக் கடந்து வந்துகொண்டிருந்தேன், கோவிலுக்கு எதிர்த்தாற்போல் உள்ள பூவரசுமரத்தில் சல சல என்ற சத்தத்துடன் கிளைகள் அசைந்தன. அதைத் தொடர்ந்து கீழே உள்ள குளத்தில் தொப்பென்று சத்தம் கேட்டது. எனக்குத் திடீர் என்று தூக்கி வாரிப் போட்டது,பயந்துபோய்த்திரும்பிப் பார்க்காமல் ஒரே அடியாய் விருவிருன்னு நடந்து; வந்து விட்டேன். வீடு வந்ததும் உடம்பெல்லாம் வியர்த்துச் சட்டை நனைந்து போய் இருந்தது.

அகால வேளையிலே ஏன் ஒண்டியாய் வந்தாய்? அங்கேயே படுத்துறங்கிவிட்டு, இராப் பொழுதைக் கழிச்சிட்டு காலையிலே வர்றது தானே!

இதைக் கேட்டுக் கொண்டிருந்த வேலன் இடையே குறுக்கிட்டான்.

பேய், பிசாசு என்று சொல்வதெல்லாம் சுத்த மனப்பிரேமை, மனத்திடம் உள்ளவர்களை இதெல்லாம் ஏதும் செய்யாது.

நீ சொல்லுவே, நீதான் எதையும் மறுத்துப் பேசாமல் இருக்க மாட்டியே! உனக்குத்தான் தெய்வமில்லே, பூதமில்லே, ஒண்ணுமே கிடையாதே! பேய் பிசாசு இல்லேங்கிறியே, இந்த இருட்டிலே சுக்கான் ஆற்றுக் கலுங்கடிவரையிலும் போய்விட்டு வரமுடியுமா?

ஓ......! போய்விட்டு வந்துவிட்டால்...! ஐந்து ரூபாய் பந்தயம், என்றான் ஒருவன்.

சரி...

நீ அங்கே போய்விட்டுவந்ததற்கு என்ன அடையாளம்? ஒரு முளைக்குச்சியை கலுங்கடி மதகுக்குப் பக்கத்தில் அடித்துவிட்டுவர வேண்டும்.

வேலன் சரி என்று ஒப்புக்கொண்டுவிட்டானே தவிர, அவனுக்கு உள்ளுக்குள் கொஞ்சம் பயமாகத்தான் இருந்தது. இருந்தும் சரி என்று கூறிவிட்டானே! என்ன செய்வது? போகாமல் இருந்துவிட்டால், சும்மா இருப்பார்களா அவனது நண்பர்கள்? அவ்வளவுதான் அவர்கள் முகத்தில் அப்புறம் விழிக்கவே முடியாது. அவனைக் கேலி செய்து மானத்தை வாங்கிவிடுவார்கள். எப்படியும் போய்விட்டு வந்துவிடுவது என்று எண்ணி மனதைத் திடம் செய்துகொண்டான்.

புறப்பட்டான் சுக்கான்ஆறு கலுங்கடி நோக்கி. கையில் ஒரு விசை விளக்கும் எடுத்துக்கொண்டான். புதிய தண்ணீர் வந்து சில நாட்களே ஆனபடியால், சிவந்த வண்ணத்துடன் நுங்கும் நுரையுமாக, ஆற்றில் கரைபுரண்டு தண்ணீர் ஓடியது. ஆற்றங்கரையின் மேல் நடந்துகொண்டிருந்தான் வேலன். அவனது உள்ளத்திலே, அவனது பாட்டி எப்போதோ அவனுக்குக்கூறிய பேய்க்கதைகள் வந்து நிழலாடின.

ஆற்றங்கரையின் இருமருங்கிலும் அடர்ந்து வளர்ந்த செடி கொடிகள்காட்சியளித்தன. நிதானமாக, விளக்கு வெளிச்சத்தின் உதவிகொண்டு நடந்துகொண்டிருந்தான். சரசர என்ற சத்தம் கேட்டுக் சற்றுத் தயங்கினன் வேலன். ஒரு கீரி ஒன்று வெளிச்சத்தையும் ஆள் அரவத்தையும் கண்டு பயந்துபோய், இடதுபுறம் இருந்து வலதுபுறம் ஓடியது. கீரி என்று அறிந்தவுடன் மனதைத் திடபபடுத்திக்கொண்டு மேலும் நடந்தான். கொஞ்சத்தூரம் நடந்து பந்தய இடத்தை அடைந்தான். பந்தய விதிப்படி முளையை அடிக்கக் கல் இல்லாததால் விளக்கின் உதவிகொண்டு கல் ஒன்றைத் தேடிப்பிடித்தான். கலுங்கடி மதகின் பக்கமாக உட்கார்ந்து முளையை அடிக்க ஆரம்பித்தான்.

முளையை அடிக்கும்போது அவனுக்கு ஏதோ ஒரு உள்ளுணர்வு தோன்றிப் பயம் ஏற்பட்டது. பின்புறம் இருந்த மூங்கில் மரங்கள் காற்றினால் அசைந்து அசைந்து கிரிச், கிரிச் என்ற ஒலியை உண்டாக்கிக்கொண்டிருந்தன. எனவே அந்தச் சத்தம் வந்த திக்கை நோக்கித் திரும்பியவண்ணமே முளையை அடித்துவிட்டு எழுந்தான். அவனதுவேட்டி வெடுக்கென்று இழுக்கவே திடீரென்று பயந்து கீழே விழுந்தான். அவ்வளவுதான், இருதயம் வெடித்து வாயினாலும் மூக்கினாலும் இரத்தம் வழிந்தது. அவனது உயிர் உடலைவிட்டுப்பிரிந்தது. ஆம், அவன் திரும்பிக்கொண்டே முளையை அடிக்கும்போது தனது வேட்டியின் முனையையும் சேர்த்து அடித்தது அவனுக்கே புரியாததால், அவன் எழுந்திருக்கும் போது யாரோ வேட்டியைப்பிடித்து இழுப்பதுபோன்று இருந்ததால், கலுங்கடி முனிதான் வேட்டியைப் பிடித்து இழுத்திருக்கிறது என்று எண்ணி அவன் திடுக்குற்றுப் பயந்து விழுந்து செத்தான்.

வேலன் இரவு வெகுநேரமாகியும் திரும்பி வாராததால், பந்தயத்தில் ஈடுபட்டிருந்த அவனது நண்பர்கள் பயந்தனர். அதன் காரணமாக வெளியில் யாரிடமும் சொல்லவில்லை. ஒருவேளை நம்மிடம் வீருப்பாகப் பேசிவிட்டு யாருக்கும் தெரியாமல் வீட்டில்போய்ப் படுத்

(15-ம் பக்கம் பார்க்க)

2-ம் பக்கத் தொடர்ச்சி

என்பதை நானும் அறிகிறேன்! ஆனால் அவர்கள் கிளப்பிவிட்ட அவதூறு புலவர் சமுதாயத்தையேயல்லவா தூக்கி எறிவதாக உள்ளது! அவர்கள் பேசியவற்றைக் குறித்துக்கொள்ளச்செய்தித்தாள் நிருபர் கூட்டம் இருந்தது; ஒலிபரப்ப வானொலி இருந்தது; பின் அவர் நாவில் வெடித்த நச்சுக் கொள்கைகள் பரவ வேறு என்ன வசதி வேண்டும்?

அந்த மாநாட்டில் பிரஞ்சு நாட்டு அறிஞரும், வங்காள அறிஞர்களும், பிறரும் கூடி இருந்தார்களே! அவர்களெல்லாம் என்ன நினைத்துக்கொண்டிருப்பார்கள் என்பதைக் கற்பனை செய்துபார்!

நாமெல்லாம் தமிழுக்கு உரைகல் என்று போற்றுகின்ற தமிழ்ப் பேரறிஞர்களை, நேற்றுவரை இருக்குமிடம் தெரியாதவர்கள் ஒரே நாளில் எள்ளி நகையாடிவிட்டுக் கலைந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல! அவர்கள், எழுத்துலகில் தனிப்பாதையை வகுத்துக்கொண்டிருக்கும் நமதியக்க எழுத்தாளர்களையும் தாக்கிப் பேசினார்கள்; நம் உரிமையைத் தாங்கிப்பேசத் தலைவர்முன் வந்தது எனக்கு ஆறுதலாக இருந்தது.

"சென்றான்... சென்றான்... வாழ்க்கையின் ஓரத்திற்கே சென்றான்" என்ற முறையில் நம் அறிவியக்க எழுத்தாளர்கள் பயன்படுத்தும் ஒரு தொடரைச் சுட்டிக்காட்டி இதில் அர்த்தமிருக்கிறதா?" என்று கேட்டார் ஒரு எழுத்தாளர்! இவை வெறும் வார்த்தைக் கோவை என்றும், 'சென்றான்' என்று சுருங்கச் சொன்னாலே போதும் என்றும்அவர்வாதாடினார்!

ஆனால் தலைமை வகித்த தமிழாசிரியர் கழகத் தலைவரும், நம் தோழர்கள் சிலரும் விளக்கம் தரும்போது, 'சென்றான்' என்ற சொல்லில் உள்ள பொருள் வேறு; மேற்கண்டவாறு அடுக்கிச் சொல்வதில் வெளிப்படும் பொருள் வேறு என்றும் எடுத்துக் கூறினார்கள். 'தின்றான்' என்றால் ஏதோ சாப்பிட்டான் என்று பொருள்; 'தின்றான் தின்றான்... தின்றுகொண்டே இருந்தான் 'என்றால் ஒரு குன்று சோற்றைத் தின்றான் என்று பொருள் என்பதைக்கூறி அந்த அரை மூளைக்கு விளங்க வைப்பதற்குள் பெரும்பாடு படவேண்டியிருந்தது!

மேலும் அவர்கள் பகுத்தறிவியக்கத்தவரைக் கேலி செய்வது போல்"எவைஎவற்றிலோ கலப்புத் தேவை என்பவர்கள் மொழியில் கலப்புக் கூடாதென்கிறார்களே"என்று இழித்துப் பேசினார்கள்; அப்போது வந்திருந்த கா. அப்பாதுரையார், மா. சு. சம்பந்தன் எம். சி., ஊ. செயராமன், சா. அமீது எம். ஏ. ஆகியோர் இப்படிப் பேசியவர்க்குத் தக்க முறையில் பதில் தந்தார்கள்; இருந்தாலும்விழித்துக்கொண்டே, கண்மூடி உறங்கும் அந்தச் சமர்ப்பணக் கட்சியினர் எவ்வளவு இறுமாந்து பேசினார்கள் தெரியுமா?

ஒரு வயதான எழுத்தாளர் தமிழிலக்கணத்தையும், இலக்கண ஆசிரியர்களையும் நையாண்டி செய்து பேசியதை நீ அறிய வேண்டும் என்பதற்காகவே குறிப்பிடுகிறேன். அவர் "எண்ணெய் என்பதை 'எண்ணை' என்று ஏன் எழுதக் கூடாதாம்! எள்ளிலிருந்து எடுக்கும் நெய் எண்ணெய் என்றால், மண்ணெண்ணெய் என்பது மண்ணுக்குள் இருக்கும் எள்ளிலிருந்து எடுத்த நெய்தானா?" என்று கேட்டுவிட்டுக் கையொலியை எதிர் நோக்கினார்! நான்காம் வகுப்பு மாணவனும் கேட்க முடியாத கேள்வி இது! பாவம்! தமிழிலக்கண, இலக்கிய மரபையே புரிந்து கொள்ளாதவர்கள்தாம், தமிழ் எழுத்தாளர் மாநாடு கூட்ட வாய்ப்பளித்திருக்கிறது இந்தத் தமிழ் மாநிலம்!

நண்பா! தமிழ்ச் சொற்களின் ஆழத்தில் நம்பிக்கையற்றோர் தமிழ் எழுத்தாளர்களாம்! தமிழ் இலக்கணத்தில் நம்பிக்கை இல்லாதவர்கள் இலக்கியம் வளர்க்கிறார்களாம்! தமிழ்ப் புலவர்களிடம் நம்பிக்கையற்றோர் புதினம் படைக்கிறார்களாம்!

இனியும் இந்த அரை வேக்காடு ஆசாமிகளை எதையும் பேசவிட்டு, நாம் கேட்டுக் கொள்ளத்தான் வேண்டுமா? இந்த 'அங்குரார்ப்பண' ஆசாமிகளுக்கு உடனடியாகப் பாடம் புகட்ட வேண்டாமா? தமிழர் மரபுக்கும் பண்பாட்டுக்கும் கேடு விளைவிக்கும் இவர்களின் ஆதிக்கம் ஓய்வதற்கு, நீயும் நானும் போரில் ஈடுபடக் காத்திருக்கிறோம்; ஆனால் இந்த நாடு விழிப்புணர்ச்சி பெறவேண்டுமே? பெறுமா?

நண்பன்,
வேந்தன்.

★ டலாய்லாமாவுக்கு 35000!
★ பொங்கும் வங்கம்
★ சென்னைக்கு நாமம்

அப்பனுடைய வழியில் பிள்ளை!-என்பது அரசியலில் கிடையாது. இதை அம்மையார் * புரிந்துகொள்ளவேண்டும். இந்திரா காந்தி ஒரு சிறுபிள்ளை!!", என்று காரசாரமான வார்த்தைகளை வீசிக்கொண்டிருந்தார். யார், என்று பார்ப்பதற்காகப் பார்லிமெண்டுக்குள் நுழைந்தேன். கேரளத்தில் டில்லி தலையிட்டது தவறு என, கம்யூனிஸ்டுத் தலைவரான டாங்கே வெளுத்துக்கட்டிக்கொண்டிருந்தார்.

*

பதுக்கி வைத்திருக்கும் உணவு மூட்டைகளைப் பலாத்காரமாக வெளியே கொணருவோம்! மந்திரிகளின் வீடுகளுக்கு முன் மறியல் செய்வோம்! சட்டமறுப்புச் செய்வோம்! சட்டமறுப்புச் செய்வோம்!-என்கிற சங்கநாதம் கேட்டது. வங்காளம் என்று கண்டுகொண்டேன். அங்கே உணவுப்பொருள் விலைகளெல்லாம் ஏறுமுகமாகிக் கொண்டேயிருப்பதாலும், அதனைச் சரிவரக்கவனித்துக் காங்கிரஸ் சர்க்கார் நடவடிக்கைகள் எடுக்காததாலும், எதிர்க்கட்சிகள் யாவும் ஒன்றுகூடி இவ்வண்ணம் பெரியதொரு கிளர்ச்சி செய்யப்போகின்றன, ஆகஸ்டு 20ந் தேதி முதல். எங்கெங்கே உணவுப் பொருள்கள் பதுக்கிவைக்கப்பட்டுள்ளவோ, அங்கெல்லாம் புகுந்து எடுத்து எறியப் போகிறார்கள் என்பதைக் கேட்டேன். என்ன சொல்கிறார்கள், சர்க்கார் வட்டாரத்தில் என்று அறிய, முதலமைச்சர் வீட்டுக்குள் நுழைந்தேன். ஒரே போலீஸ் கூட்டம்! "போ! எம். எல். ஏ.க்களானாலும் சரி, யாராயிருந்தாலும் சரி இழுத்துக்கொண்டு வந்து சிறைக்குள் பூட்டுங்கள்'' என்று கூவிக்கொண்டிருந்தார், பி. சி. இராய். அன்று மாலைக்குள் 20 எம். எல். ஏ.க்களும், நூற்றுக்கு மேற்பட்ட கட்சித் தலைவர்கள், தொண்டர்களும் கைதுசெய்யப்பட்டனரெனவும், தொடர்ந்து இப்படிக் கைது செய்யப்படுமென்றும் அறிந்தேன். கேரளத்தில் நடந்த மறியலை ஆதரித்த டில்லி, இப்போது என்ன செய்யுமோ என்றெண்ணியபடி கிளம்பினேன்.

*

"நான் எதுவும் செய்யவில்லை· சும்மாதான் இருக்கிறேன்,'' என்றார், அழகான மலைத் தொட்டிலான முசௌரியில் ஆனந்த வாசம் செய்யும், டலாய்லாமா. "ஐயனே! தங்களுக்காக ஒரு மாதத்துக்கு ரூ. 35,000 விதம் செலவழிக்கிறதாமே டில்லி? அப்படியென்ன செலவு உங்களுக்கு! நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாய்க்குமேல் செலவா! அப்படியென்ன, யானை அளவுக்கா சாப்பிடுகிறீர்கள்?,'' என்று கேட்டேன். டலாய்லாமா இதெல்லாம் உனக்கு எப்படித் தெரியும், என்றார். நேரு, பார்லிமெண்டில் சொன்னார் என்றேன். பரிதாபத்தோடு, என்னைப் பார்த்தார், அவர்! "இல்லை, சாமி

நமது ஞானக்கண் நிருபர் பேட்டி

சிலோனிலிருந்து, என்னுட்டு மக்கள் வெளியேற்றப்பட்டு, அநாதைகளாக ஓடி வருகிறார்கள். அவர்களுக்கு ஏதாவது உதவி செய்யுங்கள் என்றால், முடியாது என்கிறார்கள். ஆனால், ஒரே ஒரு ஆசாமியான உங்களுக்கு 35000 ரூபாய் மாதம் ஒன்றுக்குச் செலவழிப்பதென்றால், மனவேதனையாக இருக்கிறதா? யார் வீட்டுப் பணம்? எங்களுடையது தானே! எங்கள் வயிற்றிலடித்து, இப்படியெல்லாம் அழிப்பது, அழகா?,'' என்றேன். அவர் பேசாமல் தன்னுடைய மொட்டைத் தலையைத் தடவிக் கொண்டிருந்தார்.

*

சென்னையில், திருவாளர் பக்தவத்சலம் அவர்களைப்பார்க்கலாமா என்று நுழைந்தேன். அவர் பலத்த கவலையில் ஆழ்ந்திருப்பதாகச் சொன்னார்கள். என்னகவலையென்று விசாரித்தேன். தமிழ்நாட்டைத் தென்னிந்திய உணவுக் கவுன்சிலிலிருந்து பிரித்துவிட வேண்டுமெனப் பிரமாதமாக டில்லியுடன் வாதாடிக்கொண்டிருந்தாரல்லவா! 'முடியாது' என்று டில்லி, தலையில் அடித்தாற்போல்சொல்லி விட்டதாம். ஐயோ பாவம்!-என்று நினைத்துக்கொண்டு புறப்படும் போது தொழிலமைச்சர் வெங்கட்டராமன் வந்தார். "என்னங்க! உங்களுக்கும் டில்லி ஒரு நாமம் போட்டுவிட்டதாமே? கச்சா பிலிம் தொழிற்சாலை ஏற்படுத்துவதைப் பற்றி மூன்று ஆண்டுகளுக்கு மூச்சுவிடக்கூடாது! என்று சொல்லிவிட்டதாமே,டில்லி?'' என்றேன். "அதனால் என்ன! நான் ஐ. நா. சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளப்போகிறேன். தெரியுமோ?'' என்று கேட்டபடியே நடக்கலானார். ஐயோ, திராவிடமே என்றெண்ணிக்கொண்டு கிளம்பினேன்.

*

14-ம் பக்கத் தொடர்ச்சி

திருப்பானோ என்று எண்ணினர். காலை, பொழுது விடிந்தது. ஊரார் செய்தியறிந்து வேலனின் பிணத்தைப் பார்க்கக் கூடினர். பிறகு, முனி அடித்து வேலன் இறந்துவிட்டான் என்று பஞ்சாயத்தார் முடிவு செய்தனர். அதையே எல்லோரும் ஆமோதித்தனர். சவம் அடக்கம் செய்யப்பட்டது.

வேலன் முனி அடித்து இறந்துவிட்டான் என்று முடிவு செய்தார்களே தவிர, அதன் உண்மையான காரணத்தை யாராலும் அறிய முடியவில்லை. ஆம்; திடீர் பயத்தின் காரணமாக இரத்த அமுக்கம் ஏற்பட்டு இருதயத்திலிருந்து இரத்தம் வழிந்து— துவாரங்கள் உள்ள பகுதிகளான வாய் மூக்கு இவைகளின் வழியாக அதிக இரத்தம் வெளிவந்துவிட்டபடியால் அவன் இறந்துவிட்டான் என்ற உண்மையான காரணத்தை எவராலும் அறிய முடியவில்லை. அறியவும் விரும்பவில்லை, அறிந்தவர்கள்கூறினாலும் அதை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இல்லை! ஆம்; அவர்களிடையே 'மடைமை' இருள் வளர்ந்து, அறியாமைப் போதையுற்றிருந்தனர்.

★

கலப்படம்

"தேனி"

பெண்டிர் பொறுப்பரோ?

இலண்டன்மாநகர்— லார்ட்ஸ் மைதானத்தில்—'கிரிக்கெட்' ஆட்டம் மிக விறு விறுப்பாக நடந்துகொண்டிருந்தது.

விளையாட்டைப் பார்த்துக்கொண்டிருந்த பெண்கள் பகுதியிலிருந்து திடீரென்று ஒரே கூச்சல்—குழப்பம்! யாருக்கும் காரணம் புரியவில்லை! ஆட்டம்கூடக் கொஞ்ச நேரம் நிறுத்தப்பட்டது!

விளையாட்டு மைதானத்தின் பொறுப்பாளர் ஒருவர், பெண்கள் பகுதிக்கு விரைந்தார், "என்ன? என்ன?" என்ற வினாக்குறியோடு!

திரும்பி வந்தார்— எதிர்ப்புறத்தில் சட்டை அணியாமல் அமர்ந்திருந்த ஆண்களிடம் போய், சட்டை அணிந்துகொண்டு வருமாறு வேண்டுகோள் விடுத்தார்.

ஆண்கள் சட்டை அணியாமலிருந்ததுதான் பெண்களிடமிருந்து எழுந்த கூச்சலுக்குக் காரணமாம்!— அவர்களுக்கு அது பொறுக்கவில்லையாம்!!

* * *

நிருபர்களிடையே முன்ஷி!

முன்ஷி— முன்னாள் மத்திய உணவு அமைச்சர்— அண்மையில் டில்லியில், நிருபர்களுக்கு ஒரு பேட்டி ஏற்பாடு செய்திருந்தாராம் 'சுதந்திரா' கட்சியின் கோட்பாடுகளை விளக்குவதற்காக. அந்தப் பேட்டியில் முன்ஷி படாத பாடுபட்டிருக்கிறார்—நிருபர்களின் கேள்விகட்குப் பதில் சொல்ல!

"நாடு சுதந்திரம் பெற்ற பிறகு, முதலாளிகளது இரத்தம் மிக அதிகமாக உறிஞ்சப்பட்டிருக்கிறது" என்றாராம், முன்ஷி!

"அப்படியானால் டாடாக்கள் கோடி கோடியாகப் பணம் குவித்திருக்கிறார்களே, இதற்கு என்ன சொல்லுகிறீர்கள்?" என்று ஒரு நிருபர் கேட்டிருக்கிறார்!

பதிலில்லையாம்! ஆனால் மற்றொரு குரல், நிருபர்களிடையேயிருந்து, முந்திராவின் பெயரை நினைவுபடுத்திற்றாம்!

அதுமட்டுமல்ல! கட்சியின் கொள்கைகளை விளக்கி, பத்திரிகைகளுக்கு அளிக்கப்பட்டிருந்த அறிக்கையில், "தொழிலாளர் உரிமைகளைப் பாதுகாப்பது" என்பதும் ஒரு திட்டமாகச் சேர்க்கப்பட்டிருந்ததாம்.

அதைச் சுட்டிக்காட்டி ஒரு நிருபர் கேட்டிருக்கிறார் "ஒரு பத்திரிகை வழக்கில் முதலாளியின் சார்பில் வாதாடினீர்களே, அதைப் போல்தான் இருக்குமோ இந்தத் திட்டமும்?" என்று!

என்ன செய்வார் பாவம்!

பேட்டி முடிந்தது! தேனீர் விருந்துக்கு நிருபர்கள் சென்றார்கள். ஒரு நிருபர், சிரிப்பொலிக்கும் ஆரவாரத்துக்குமிடையே குறிப்பிட்டாராம், "சாப்பிடுங்கள், சாப்பிடுங்கள்! நன்றாகச் சாப்பிடுங்கள்! எதையும் மீதம் வைக்காதீர்கள். இது சுதந்திரா க… யின் பணம்— பெரிய இடத்… பணம்" என்று! எப்படியிருக்… நிலைமை!

* * *

வெட்கக் கேடு!

அமெரிக்காவில் குடியேறிய வெ… ளையர்கள், செவ்விந்தியர்க… ஏமாற்றி, நிலங்களைப் பறித்… கொண்டதைப்போல், காடர்கள் என்… பழங்குடி மக்களை ஏமாற்றிச் … வியாபாரிகள் நிலத்தைப் பறித்… கொள்ளுகிறார்களாம்! ஏமாற்றுவ… குரிய சாதனம் எது தெரியுமா? ம…

அதுமட்டுமல்ல! காடர் இனத்… பெண்கள் சிலரைத் தந்திரம… ஏமாற்றி, அழைத்துவந்து, விபசார… செய்ய வைக்கின்றனராம்! இ… வெட்கக் கேட்டை பம்பாயிலிரு… வெளிவருகிற பத்திரிகை ஒன்று அ… பலமாக்கியிருக்கிறது!

* * *

தலைப்பாகை தந்த தொல்லை!

தலைப்பாகை அணிந்த காரண… தால் ஒருவருக்கு பஸ் கண்டக்… உத்தியோகம் கிடைக்காம… போயிற்றாம்!

சுந்தர் சிங் சாகர் மான் செண்டர்ப… டிரான்ஸ்போர்ட் கம்பெனிக்கு, கண்… டக்டர் வேலைகோரி மனு செய்திரு… தார்!

ஆனால் அவர், தலைப்பாகை அணி… திருந்ததால், அவருக்கு வே… கொடுப்பதா, வேண்டாமா என்… பிரச்சினை, அந்த நகராண்மைக் … கக் கூட்டத்தில் மிகக் காரசாரம… விவாதிக்கப்பட்டதாம்!

முடிவில் பிரச்சினை ஓட்டுக்கு விட… பட்டதாம்! அவருக்கு வேலை கொடு… கக் கூடாது என்று 41 பேரு… கொடுக்கவேண்டும் என்று 31 பேரு… வாக்களிக்கவே, பாவம், பழையப… வேலைதேடும் பணியிலேயே அ… இறங்க நேரிட்டதாம்!!

… 'திராவிடநாடு' அச்சகத்தில்
… அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.